Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, APRIL3, 2023

திங்கட்கிழமை ஏப்ரல் 03, 2023 | ஒளி: 08 கதிர்: 242 | பக்கம்:08 | வடக்கு,கிழக்கு | Free

# உடையில் மாற்றம்

உயர்நீதிமன்ற விதிகளின் பிரகாரம், பெண் சட்டத்தரணிகளின் உடையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பிலான வர்த்தமானி அறிவித்தல், 2023.03.30 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் வெள்ளை, கறுப்பு, வெளிறிய வெண்மை, சாம்பல் அல்லது ஊதா நிறத்திலான சேலை மற்றும் சட்டை அல்லது வெள்ளைநிற மேற்சட்டை, கறுப்புநிற கோட் மற்றும் காலணிகளுடன் கறுப்பு நிற காற்சட்டை அல்லது வெள்ளைநிற மேற்சட்டை, கறுப்பு நிற கோட் மற்றும் காலணிகளுடனான கறுப்பு நிற பாவாடை ஆகியவற்றை அணியலாம்.

தொடர்ச்சி P2

# புதிய கட்சி மே பிறக்கும்



நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து காப்பாற்றுவதற்காக ஐக்கிய குடியரசு முன்னணி என்ற புதிய அரசியல் கட்சி மே மாதம் மூன்றாம் வாரத்தில் ஆரம்பிக்கப்படும் என்று 43ஆவது பிரிவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### பயங்கரவாதத்துக்கு எதிரான

# சட்டமூலத்துக்கு எதிராக நீதிமன்றை நாடுவோம்

## சட்டத்தரணிகள் சங்கம் தெரிவிப்பு

அரசாங்கம் கொண்டு வரவுள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான புதிய சட்டமூலத்தில் அடிப்படை உரிமைகள் மீறப்படுமாயின் சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



# வெடுக்குநாறியில் 'ஜீவன்' அதிரடி



**ஜனாதிபதி ரணிலுக்கு எடுத்துரைப்பேன்**
**அடுத்த கட்டத்துக்காக காத்திருக்கின்றேன்**
**முன்வைத்த காலை பின்வைக்கமாட்டேன்**
**உரிமைக்காக தொடர் குரல் கொடுப்பேன்**
**சிறுபான்மை தலைமைகளுக்கு அழைப்பு**

கடும் சர்ச்சைக்கு உள்ளாக்கியிருக்கும் வவுனியா, வெடுக்குநாறி மலைக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான், நேற்று (02) களவிஜயம் செய்து, அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்தார்.

தொல்பொருள் திணைக்களத்தின் பொறுப்பின் கீழிருந்த இந்த ஆலயத்தின் விக்கிரங்கள் இனந்தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டன. அண்மையில் இடம்பெற்றிருந்த இந்தச் சம்பவத்தின் போது வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் சிலையும் பெயர்த்து எறியப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2



# நானுஓயா மண்ணை எடுத்து உருண்டை

## தஞ்சாவூர் பூசாரி தப்பியோட்டம்

ஆ.ரமேஸ்

நானுஓயா கிளாசோ கல்கந்தை மேல் பிரிவு தோட்ட அம்மன் ஆலயத்தில் சூனியம் வைக்கப்பட்டுள்ளதாக அத்தோட்ட மக்களை நம்ப வைத்து சூனியம் எடுத்த, இந்தியாவின் தஞ்சாவூரைச் சேர்ந்த பூசாரி, பின்னர் இடம்பெற்ற களேபரத்தில் தாக்குதலுக்கு உள்ளாகி தனது உதவியாளருடன் தப்பிச் சென்றுள்ளார்.

தொடர்ச்சி P2

# அனுமதிக்குப் பின் கும்பாபிஷேகம்



வவுனியா, நெடுங்கேணி, வெடுக்குநாறி மலைக்கு விஜயம் செய்திருந்த, முன்னாள் ஜனாதிபதியின் இந்துமத ஆலோசகர் பாபுசர்மா, அங்கு நேற்றையதினம் (02) ஆசீர்வாத பூஜைகள் மட்டுமே நடத்தப்பட்டதாகவும் நீதிமன்ற அனுமதி கிடைத்தவுடன் கும்பாபிஷேகம் நடத்தப்படும் என்றார்.

தொடர்ச்சி P2

### வைத்தியசாலைகளுக்குள்

# கறுப்பு கொடிக்கு தடை விதிப்பு

## அரசாங்கம் ஒடுக்க முயல்வதாக குற்றச்சாட்டு

வைத்தியசாலை வளாகத்தினுள் கறுப்புக் கொடி, பதாகைகள் காட்சிப்படுத்தப்படுவதற்கு தடை விதித்து சுகாதார அமைச்சின் செயலாளர் வெளியிட்ட சுற்றறிக்கை, தமது எதிர்ப்பு நடவடிக்கையை ஒடுக்குவதற்கான அரசாங்கத்தின் முயற்சி சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

# "நான் இருக்கும் வரை நடக்காது"



தான் ஜனாதிபதியாக இருக்கும் காலத்தில் சட்டம் ஒழுங்கை மீற எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதேபோல் தான் ஒருபோதும் பிரசித்தமான தீர்மானங்களை மேற்கொள்ளப் போவதில்லை எனவும், மாறாக சரியான தீர்மானங்களையே எடுப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, பிரசித்தமான தீர்மானங்களால் நாட்டுக்கு சீரழிவு மட்டுமே ஏற்பட்டதாகவும் தெரிவித்தார.

தொடர்ச்சி P2



# ஜனாதிபதி தலைமையில் தேசிய புத்தரிசி விழா

தேசிய புத்தரிசி விழா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அநுராதபுரத்தின் வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீ மஹாபோதிக்கு அருகில் ஞாயிற்றுக்கிழமை (02) இடம்பெற்றது.

அறுவடை செய்யப்பட்ட நெல்லின் முதற் பகுதியை ஜய ஸ்ரீ மஹாபோதிக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்த புத்தரிசி விழா, அடமஸ்தானாதிபதி வண. பல்லேகேம ஹேமரதன நாயக்க தேரரின் ஆலோசனைக்கு அமைவாக விவசாய அமைச்சு மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்தால் 56 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டது.

மன்னர் காலத்தில் இருந்து நடைபெற்று வரும் இந்தச் சம்பிரதாயத்துக்கு, நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான விவசாயிகள் திரண்டு வந்திருந்திருந்தனர்.

தொடர்ச்சி P2

# 10க்கு முன் சம்பளம்

அரச ஊழியர்களின் ஏப்ரல் மாத சம்பளம் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்கப்படும் என்றும் அதற்காக 13 ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் நிதி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஏப்ரல் மாதத்துக்கான ஓய்வூதிய கொடுப்பனவு மற்றும் சமுர்த்தி கொடுப்பனவு என்பனவற்றையும் ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

# முட்டையின் விலை குறைந்தால் உணவுப் பண்டங்களின் விலை குறையும்

ஒரு முட்டையின் விலை ரூ.35 ஆக குறைக்கப்பட்டால் பாண் தவிர்ந்த பிற வெதுப்பக உற்பத்திகளான தின்பண்டங்களின் விலைகளும் குறைக்கப்படலாம் என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்திய முட்டைகளின் இறக்குமதியைத் தொடர்ந்து முட்டை சந்தையிலுள்ள பிரச்சினைகள் ஒரு வாரத்திற்குள் நிவர்த்தி செய்யப்படும் என நம்புவதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் ஜெயவர்தன தெரிவித்தார்.

"உள்ளூர் சந்தைகளில் முட்டை விலை ஒரு வாரத்திற்குள் குறைக்கப்பட வேண்டும். அவ்வாறு முட்டை விலை குறைக்கப்பட்டால் பாண் தவிர்ந்த ஏனைய பேக்கரி உற்பத்திகளின் விலைகளும் குறைக்கப்படலாம். வெதுப்பகங்களும் உணவகங்களும் இன்னும் ஒரு முட்டை ரூ.55 வீதம் தான் கொள்வனவு செய்கின்றன. சந்தையில் முட்டைத் தட்டுப்பாடு நிலவுகின்றது. எரிபொருள் விலைக் குறைப்பு பேக்கரி உற்பத்திகளில் தாக்கம் செலுத்துவதில்லை. ஆனால் எரிபொருள் விலைக்குறைப்பின் நன்மைகளை பேக்கரி உற்பத்திகளூடாக விரைவில் மக்களுக்கு கொண்டு செல்வோம் என நம்புகிறோம்" என ஜெயவர்தன தெரிவித்தார்.



# ஏலம் போவோர் எம்மிடம் இல்லை

எதிர்க்கட்சியிலிருந்து அரசாங்கத்துக்கு செல்வதற்குப் பதிலாக அரசாங்கத்திலிருந்து எதிர்க்கட்சிக்கு வருவதற்கே பலர் காத்திருப்பதாகவும் ஏலத்துக்கு விலைபோகும் உறுப்பினர்கள் எம்மிடம் இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# சிறிய குற்றத்துக்கு சிறை இல்லை

சிறிய குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை சிறைச்சாலைகளில் தடுத்துவைப்பதற்கு பதிலாக மாற்று நடவடிக்கைகள் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளதாக நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# அரங்கத்துக்கு மனோ அழைப்பு



தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களின் அரங்கம் ஒன்றை பாராளுமன்றத்தில் அமைத்திடும் யோசனையை முன்னிறுத்தி தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், தமிழ் எம்.பிக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சி தலைவர் மாவை சேனாதிராசா, தமிழீழ விடுதலை இயக்க தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி தலைவர் த. சித்தார்த்தன் எம்.பி, தமிழ் மக்கள் கூட்டணி செயலாளர் நாயகம் சீ. வி. விக்கினேஸ்வரன் எம்.பி ஆகியோருக்கு மின்னஞ்சல் கடிதம் மூலமே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# ஜனாதிபதியை சந்தித்தார் பாரத் லால்



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் இந்திய நல்லாட்சி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பாரத் லால், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, ஆகியோர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சனிக்கிழமை (01) சந்தித்தனர்.

இலங்கையில் அரச சேவையில் பயனுள்ள மாற்றத்தை ஏற்படுத்த உதவுவது மற்றும் பயனுள்ள கண்காணிப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அரச நிறுவனங்களின் செயற்றிறனை எவ்வாறு மேம்படுத்துவது என்பதைக் கண்டறிவதே பாரத் லாலின் இலங்கை விஜயத்தின் நோக்கமாகும்.

மக்கள் சேவைகளை வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதாகவும் இதன் மூலம் பல பில்லியன் ரூபாயை சேமிக்க முடிந்துள்ளதாகவும் ஜனாதிபதியிடம் பாரத் லால் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் அரச நிர்வாகம் மற்றும் அரச கொள்கை தொடர்பான பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு ஆதரவளிக்குமாறு பாரத் லாலிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

PAGE 1 தொடர்ச்சிகள்

## சட்டமூலத்துக்கு எதிராக நீதிமன்றை நாடுவோம்

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சட்டமூலத்தை ஆராய்வதற்காக சிரேஷ்ட சட்டத்தரணிகள் அடங்கிய குழுவொன்றை சங்கம் ஏற்கெனவே நியமித்துள்ளதாக அதன் புதிய தலைவர் கௌசல்ய நவரத்ன தெரிவித்துள்ளார்.

சட்டமூலத்தை ஆராய்வு செய்வதற்கான குழு ஒரு வாரத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்கும் எனவும் அதன் அடிப்படையில் எந்தவொரு சட்ட நடவடிக்கைகளையும் தாங்கள் தீர்மானிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உத்தேச புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தில் ஏதேனும் சிக்கல் இருப்பதாக சம்பந்தப்பட்ட குழு கண்டறிந்தால், அதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாடவுள்ளதாக குறிப்பிட்டார்.

## நானுஓயா மண்ணை எடுத்து உருண்டை

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, இந்தியாவின் தஞ்சாவூரைச் சேர்ந்த பூசாரியொருவர் தலவாக்கலையில் தங்கியிருந்து சூனியம் எடுப்பது உள்ளிட்ட செயல்களை செய்து பணம் சம்பாதித்து வந்துள்ளார்.

கிளாசோ கல்கந்தை மேல் பிரிவுக்கு கடந்த சில நாள்களாக வந்த அவர், மூன்று வீடுகளில் சூனியம் எடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு, ஊர் மக்களை நம்பவைத்துள்ளார்.

இந்நிலையில், தோட்டத்தில் உள்ள அம்மன் ஆலயத்தில் ஆறு இடங்களில் சூனியம் வைக்கப்பட்டு தோட்ட மக்களை ஆலயத்துக்கு வரவிடாமல் செய்துள்ளதாக குறிப்பிட்டு மக்களை குழப்பியுள்ளார்.

இதனால் பீதியடைந்து, ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள சூனியத்தை எவ்வாறு எடுப்பது அதற்கு என்ன செய்ய வேண்டும் என ஆலோசித்து பின்னர் பூசாரியை அழைத்து ஆலய நிர்வாகம், பொது மக்கள் ஆகியோர் வினவியுள்ளனர்.

ஆலயத்தில் சூனியம் என்பது பொய் இது இந்து மதத்தை கேவலப்படுத்தும் செயல் என கூறி பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ள அச்சத்தை போக்க சூனியம் இருந்தால் எடுக்கட்டும் என ஆலய நிர்வாகம் கூறியுள்ளது.

எனினும், பூசாரியை அழைத்து ஆலயத்தில் புதைக்கப்பட்டுள்ள சூனியத்தை எடுக்க என்ன செய்ய வேண்டும் என குறித்த மூன்று வீட்டாரும் கேட்டதை அடுத்து, சூனியம் ஒன்றுக்கு தலா 6 ரூபாய் கேட்ட 5 ஆயிரம் ரூபாய்க்கு இணங்கியுள்ளார்.

மேலும், பூசைப் பொருட்களையும் மக்களிடமே கேட்டு தலா ஒரு வீட்டுக்கு ஆயிரம் ரூபாய் என 46 ஆயிரம் ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தில் சூனியம் எடுக்கும் செயலுக்கு ஆலய நிர்வாக தரப்பு சார்ந்த சிலர் எதிர்ப்பும் ஏனையோர் ஆதரவும் தெரிவித்து ஆலயத்தில் சூனியம் எடுக்கும் நடவடிக்கை வெள்ளிக்கிழமை (31) பிற்பகல் ஆரம்பிக்கப்பட்டது.

பூசை வேலைகளை ஆரம்பித்த அவர், அருள் எடுத்து ஆஞ்சநேயர் சாமியை வரவழைத்து அங்கும் இங்கும் தாவி முதலில் ஆலயத்தின் முன் வாசலில் குழியை தோண்டச் சொல்லி, அதில் ஊற்று நீரை இடுமாறு கூறி, இரு கைகளையும் இட்டு கிண்டி கிளறி, ஒரு மண் உருண்டையை எடுத்து தட்டில் வைத்தார்.

எனவே, நான்காம் இடத்துக்கு தாவிய பூசாரி அங்கு வைத்திருந்த பூசை தட்டை எடுத்து வீசிவிட்டு பூமியை முகர்ந்து பரிசோதித்து "இங்கு பொம்மை மூலம் சூனியம் செய்து புதைத்துள்ளனர் இது ஆபத்தானது" என தெரிவித்தார். எனவே எதிர்வரும் செவ்வாய்கிழமை தோட்டத்தில் ஒருவர் அம்மனுக்கு மடிப்பிச்சை ஏந்தி பெரும் அரிசியில் கூழ் காய்ச்சி படைத்து விட்டு மறுநாள் புதன் கிழமை சூனியத்தை எடுக்க வேண்டும் என்று அருள் வாக்கு சொன்னார்.

பயம் ஏற்பட்டதால் இன்றே எதையேனும் செய்து சூனியத்தை எடு சாமி என கூச்சலிட்டதால், குழப்பம் ஏற்பட்டது. இந்தக் குழப்பம் பின் இரு தரப்புக்கிடையில் சண்டையாக மாறி கைகலப்பானது. இந்த குழப்பத்தில் தாக்குதலுக்கு உள்ளான பூசாரி மற்றும் உதவி பூசாரியும் உயிரை பிடித்து கொண்டு ஓட்டமெடுத்தனர்.

## "நான் இருக்கும்...

முப்படைகளினதும் தலைவரான ஜனாதிபதி, அநுராதபுரத்திலுள்ள விமானப்படை முகாமில் சனிக்கிழமை (01) முப்படையினருக்கான சிறப்புரை ஆற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார். பயங்கரவாதத்தை வெற்றிகொண்டது போன்றே நாட்டின் பொருளாதார யுத்தத்தையும் வெற்றிகொண்டு பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த துரித நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

நடத்து முடிந்த போராட்டங்களை போல் அல்லாது எதிர்காலத்தில் வரவிருக்கும் இந்தப் போராட்டங்கள் தொழில்நுட்பத்தை மையப்படுத்தியதாக அமையும் என வலியுறுத்திய ஜனாதிபதி, தொழில்நுட்ப தெரிவுடன் கூடிய முப்படையினரை உருவாக்குவதற்காகவே "பாதுகாப்பு - 2023" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# வெடுக்குநாறியில் 'ஜீவன்' அதிரடி

இதுதொடர்பில், பல்வேறு அமைப்புகளும் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும் குரல் கொடுத்துவரும் நிலையில், அந்த ஆலயத்துக்கு, சிலைகள் மற்றும் விக்கிரங்கள் சகிதம் அமைச்சர் தொண்டமான் களவிஜயம் செய்திருந்தார்.

அங்கு, ஆசீர்வாத பூஜைகள் இடம்பெற்ற நிலையில் அதில் கலந்துகொண்டார். அத்துடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான ராமேஸ்வரன், குலசிங்கம் திலீபன் ஆகியோரும் பிரசன்னமாய் இருந்தனர்.

ஆசீர்வாத பூஜைகளுக்குப் பின்னர் ஆலய நிர்வாகத்திடம் கலந்துரையாடிய அமைச்சர் ஜீவன் தொண்டமான், இந்த விவகாரம் தொடர்பில், உரிய ஆவணங்கள் கிடைக்கப்பெற்ற பின்னர், விக்கிரகங்கள் ஆலய நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்படும் என்றார்.

இந்நிலையில், "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், நாளை (இன்று) நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்திலும், வெடுக்குநாறி மலை விவகாரம் தொடர்பில், எடுத்துரைப்பேன்" என்றார்.

"ஆலய நிர்வாகத்திடம் கலந்துரையாடி போது, ஆலயம் தொடர்பில் உரிய ஆவணங்கள் இருக்கவில்லை. ஆகையால், அவற்றை ஏற்பாடு செய்யுமாறு நிர்வாகத்திடம் வலியுறுத்தினேன்" என்றும் அமைச்சர் ஜீவன் தெரிவித்தார்.

இந்த ஆலயம் தொடர்பில் நீதிமன்றத்தில் மூன்று வழக்குகள் நிலுவையில் இருப்பதால், சட்டத்துக்கு மதிப்பளித்து, தீர்ப்பு வெளியான பின்னர், உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்தார்.

சட்டத்துக்கு மதிப்பளிக்கவேண்டுமெனத் தெரிவித்த அவர் "அடுத்தகட்டத்துக்காக காத்திருக்கின்றேன். அத்துடன், தான் முன்வைத்த காலை ஒருபோதும் பின்வைக்கமாட்டேன் என்று தெரிவித்ததுடன், அமைச்சரவையில் கடுமையாக குரல் கொடுப்பேன். பாதிக்கப்பட்ட தரப்பினருக்கான தனது குரல் தொடர்ந்து ஒலித்துக்கொண்டே இருக்கும்" என்றும் தமிழ்மிரருக்கு தெரிவித்தார்.

இந்நிலையில், "சிறுபான்மையின மக்களின் உரிமைகள் மறுக்கப்படும்போது, சிறுபான்மையின தலைமைகள் ஒரு குடையின் கீழ் அணித்திரண்டு நின்றால், கோரிக்கைகளை வெற்றிகொள்வதும், மக்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கு ஓரணியில் குரல்கொடுப்பதற்கும் இலகுவானாதாக இருக்கும். இதனூடாக அரசாங்கத்துக்கும், தீண்டிப்பார்க்கும் குழுக்களுக்கும் கடுமையான அழுத்தங்களை பிரயோகிக்க முடியும்" என்றும் அமைச்சர் ஜீவன் நம்பிக்கை தெரிவித்தார்.

## ஜனாதிபதி தலைமையில் தேசிய புத்தரிசி விழா

விவசாயத்தின் மூலம் நாடு தன்னிறைவு பெறவும், விளைநிலங்கள் செழிப்பாக இருக்கவும், சுபீட்சமிக்க பொருளாதாரம் ஏற்படவும் பிரார்த்தனை செய்தனர்.

09 மாகாணங்களிலும் உள்ள விவசாயிகளுக்கு அந்தந்த பிரதேசங்களுக்கு பிரத்தியேகமான விதைகள் மற்றும் நெல் வகைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கி வைத்தார்.

## 4 வருடங்களாக மூவரால் 10 வயது மாணவி பாலியல் துஷ்பிரயோகம்

க. அகரன்

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த 10 வயது மாணவியை கடந்த நான்கு வருடங்களாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கியதாக சிறுமியின் சகோதரன், சிறிய தந்தை உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டு உள்ளதாக வவுனியா பொலிஸார் வெள்ளிக்கிழமை (31) தெரிவித்தனர்.

வவுனியா நகர்ப்புற பாடசாலையில் ஐந்தாம் தரத்தில் கல்வி கற்று வரும் குறித்த மாணவி, புதன்கிழமை (29) தனது வகுப்பு சக மாணவிக்கு, தனக்கு வீட்டில் நடக்கும் கொடுமைகளையும், பாலியல் துஷ்பிரயோகங்களையும் கூறி அழுதுள்ளார். இதையடுத்து, அந்த மாணவி குறித்த விடயத்தை தமது வகுப்பாசிரியரிடம் தெரியப்படுத்தி உள்ளார்.

ஆசிரியர் சம்மந்தப்பட்ட மாணவியிடம் சம்பவத்தின் உண்மை தன்மையை விசாரித்து அறிந்து கொண்டு உடனடியாக, வவுனியா மாவட்ட செயலகத்தின் சிறுவர் நன்னடத்தை பிரிவுக்கு தெரியப்படுத்தி உள்ளார். அவர்கள், வவுனியா பொலிஸ் நிலைய சிறுவர் பெண்கள் பிரிவுக்கு தெரியப்படுத்தியதை அடுத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த 10 வயது மாணவி, கடந்த நான்கு வருடங்களாக தொடர்ச்சியாக மூவரால் பாலியல் ரீதியில் துன்புறுத்தப்பட்டு உள்ளார் என்பது பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்ததையடுத்து, துரிதமாக செயற்பட்ட வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார், சம்பவத்துடன் தொடர்புடைய மூவரை கைது செய்துள்ளனர்.

10 வயது மாணவி வழங்கிய வாக்கு மூலத்தின் அடிப்படையில், தாயின் இரண்டாவது கணவரான இறம்பைக்குளம், அலகர பகுதியைச் சேர்ந்த 32 வயது நபர், மாணவியின் உடன் பிறந்த சகோதரனான சமனங்குளம் பகுதியை சேர்ந்த 16 வயது இளைஞர், உறவினரான வைரவபுளியங்குளம் பகுதியை சேர்ந்த 53 வயது நபர் ஆகிய மூவரே கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் மாணவி வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டு உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஏலம் போவோர் எம்மிடம் இல்லை

பணத்துக்கு அடிபணியும் எம்.பிகள் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை என்றும் மக்கள் ஆணைக்கு மாத்திரமே அவர்கள் அடிபணிவர் எனவும் குறிப்பிட்ட அவர், எமது எம்.பிக்களை முடிந்தால் பணம் கொடுத்து வாங்குங்கள் என்று சவால் விடுத்தார்.

சனிக்கிழமை (01) மாலை கடுவெல பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கட்சிதாவல் செய்தி கேட்டு முன்னைய எதிர்க்கட்சித் தலைவர்கள் தமது உறுப்பினர்களை பாதுகாத்துக் கொள்ள சிங்கப்பூருக்கு அனுப்பியது போன்ற அத்தகைய தேவைப்பாடு தனக்கு இல்லை என்று குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் ஏலத்துக்கு விலைபோக மாட்டார்கள் என்று தான் பூரண நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தற்போதைய அரசாங்கத்தின் தலைவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக போலிச் செய்திகளை உருவாக்கி சமூகவலைதளங்களில் பதிவிட்டு, கோயபல்ஸின் தத்துவத்துக்கு அமைய போலிச் செய்திகளை மக்கள் மனதில் உண்மையென நிலைநிறுத்தும் சதியில் கூடிய ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருவதாக சுட்டிக்காட்டினார்.

இதில் ஐக்கிய மக்கள் சக்தியின் பெருமளவிலான உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைவார்கள் என்று வரும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் சந்திம விரக்கொடி மற்றும் ஜயந்த ஹேரத் போன்ற மொட்டு எம்.பிகள் எதிர்க்கட்சியில் இணைந்துள்ளனர் என்பதே பாராளுமன்றத்தில் உண்மையான நிலைப்பாடாகும் என்றார்.

இன்னும் அதிகமானோர் எதிர்க்கட்சியில் அமரவுள்ளனர் என்றும் இந்த உண்மை நிலையை மறைத்து அரசாங்கம் பொய்களை புனைந்து கொண்டு, ஐக்கிய மக்கள் சக்தியை பிளவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தை தவிர்த்து எதிர்க்கட்சிக்கு வந்தாலும், அவ்வாறு வரும் சகலரையும் இணைத்துக் கொள்ள எதிர்க்கட்சி தயாராக இல்லை எனவும், வருபவர்கள் ராஜபக்ஷர்களின் அடிமைகளாக இருக்கக் கூடாது எனவும் குறிப்பிட்டார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்க பணமில்லாத அரசாங்கத்திடம் பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்குவாங்கும் அளவுக்கு பணம் இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

## சிறிய குற்றத்துக்கு சிறை இல்லை

பாரிய குற்றங்களைப் புரியும் நபர்களுடன் அவர்கள் பழகும் வகையிலேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதா அமைச்சர் குறிப்பிட்டார்.

குறித்த சந்தேகநபர்களை ஒரு பாதுகாவலரின் கீழ் வைத்து கண்காணிக்கும் வேலைத்திட்டமொன்று தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

சிறிய குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை சிறைச்சாலைகளில் வைப்பது குறித்த சட்டத் திருத்தங்கள் குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், சிறிய குற்றங்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை நீதவான் சிறைக்கு அனுப்பாமல், பெற்றோர் அல்லது பாதுகாவரின் கீழ் கண்காணிக்கும் வேலைத்திட்டமே முன்னெடுக்கப்படவுள்ளது.

## உடையில் மாற்றம்

காற்சட்டையின் நீளம் கணுக்கால் வரை இருத்தல் வேண்டும். பாவாடையின் நீளம் அமரும்போது முழங்காலுக்குக் கீழ் இருத்தல் வேண்டும். மேற்சட்டை கழுத்துவரை அணியப்பட்டு நீண்ட கையுடையதாகவிருத்தல் வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## புதிய கட்சி மே பிறக்கும்

பதுளை வெலிகம ஹோட்டலில் சனிக்கிழமை (01) நடைபெற்ற 43ஆவது பிரிவின் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே மேற்குறிப்பிட்ட விடத்தை அவர் குறிப்பிட்டார்.

நாட்டை வறுமையில் இருந்து விடுவிக்க தகுதி அடிப்படையிலான அரசியல் தேவை என்றும் குடும்ப வாரிசு மூலம் நாட்டை ஆளும் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

"இலங்கையில் ஊழல் பணத்தால் வெற்றி பெறும் அரசியலை மாற்ற வேண்டும். காலாவதியான சோசலிச மற்றும் முதலாளித்துவக் கருத்துகளுக்குப் பதிலாக நடைமுறை வாதத்தின் அடிப்படையில் நாட்டை முன்னோக்கி நகர்த்தும் அரசியல் இயக்கம் இன்று தேவையாக உள்ளது" எனவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய குடியரசு முன்னணி என்ற பெயரில் மே மாதம் வெளியிடுவோம் என்றும் இதற்காக பல்வேறு நபர்கள் மற்றும் குழுக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாகவும் ரணவக்க குறிப்பிட்டுள்ளார்.

## அனுமதிக்குப் பின் கும்பாபிஷேகம்

அமைச்சர்களான ஜீவன் தொண்டமான், டக்ளஸ் தேவானந்தா ஆகியோருடன் சென்றிருந்த பாபுசர்மா, அந்த மலையடிவாரத்தில் ஆசீர்வாத பூஜைகளை நடத்தியதாகவும் இந்த விவகாரம் நீதிமன்றத்தில் இருப்பதால், நீதிமன்ற அனுமதிக்குப் பின்னர் சிலைகளை பிரதிஷ்டை செய்துவிட்டு, கும்பாபிஷேகத்தை நடத்துவதற்கு எதிர்பார்த்துள்ளதாகத் தெரிவித்தார்.

## கறுப்பு கொடிக்கு தடை விதிப்பு

உயிருக்கு போராடும் நிலையிலுள்ள நோயாளிகள் கறுப்புக் கொடியை பார்ப்பதால் மன உளைச்சலுக்கு ஆளாகும் நிலை ஏற்படும் எனவும் நோயாளர்களை காப்பாற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் சுகாதார ஊழியர்களின் பணிக்கு இதனூடாக இடையூறு ஏற்படும் எனவும் குறித்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைப்புகளின் வளாகத்தினுள் கறுப்புக் கொடி ஏற்றுவதையும் பதாகைகளை காட்சிப்படுத்துவதையும் தவிர்க்குமாறு குறிப்பிட்டு சுகாதார அமைச்சின் கீழ் உள்ள அனைத்து பிரதானிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள நிறைவேற்று சபை கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்படும் என அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், தங்களது கோரிக்கைகளுக்கு அரசாங்கம் தீர்வு வழங்கினால், கறுப்புக் கொடிகளை காட்சிப்படுத்த மாட்டோம் என்று அரச மற்றும் அரச தனியார் தொழிற்சங்க கூட்டமைப்பு குறிப்பிட்டுள்ளது.

## 10க்கு முன் சம்பளம்

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அரச ஊழியர்கள், ஓய்வூதியர்கள் மற்றும் சமுர்த்தி பயனாளிகள் உள்ளிட்டோரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை உரிய காலத்தில் வழங்குமாறு ஜனாதிபதி விடுத்த பணிப்புரைக்கு அமையவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்டமைக்கு அமைய 2023ஆம் ஆண்டின் இறுதி காலாண்டுக்குள் அரச ஊழியர்களுக்கான விசேட கொடுப்பனவு வழங்கப்படும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

## அரங்கத்துக்கு மனோ அழைப்பு

தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதி தலைவர்கள் மற்றும் பங்காளி கட்சி தலைவர்களான பழனி திகாம்பரம் எம்பி, வே. இராதாகிருஷ்ணன் எம்பி ஆகியோரின் உடன்பாட்டுடன் இந்த அழைப்பை விடுப்பதாகவும் மனோ கணேசன் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வினவிய போது, அவர் மேலும் தெரிவிக்கையில், "எனது நோக்கம், இலங்கை பாராளுமன்றத்தில், தமிழ் பாராளுமன்ற அரங்கம் என்ற அமைப்பை உருவாக்குவதாகும். இதுபற்றி நான் பல்லாண்டுகளுக்கு முன்பே கலந்துரையாடி உள்ளேன். எனினும் அன்று நிலவிய அரசியல் சூழல் காரணமாக அது சாத்தியமாகவில்லை. இன்று அதற்கான சாதகமான அரசியல் சூழல் உருவாகிறது. இதுபற்றி கொழும்பில் வாழும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர் இரா. சம்பந்தனையும் சந்தித்து உரையாட முடிவு செய்துள்ளேன்.

நம் நாடு இன்று சந்தித்துள்ள தேசிய பொருளாதார நெருக்கடிக்கான தீர்வை தேட இலங்கை அரசும், அதற்கு துணையாக சர்வதேச சமூகமும் கூட்டு முயற்சியில் ஈடுபட்டுள்ளன. இம்முயற்சிகளை வரவேற்கும் அதேவேளை, பொருளாதார மீட்சியுடன் நின்று விடாமல், தேசிய நெருக்கடிக்கு மூலகாரணமான தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு தேடலும், இதனுடன் சமாந்திரமாக முன்னெடுக்கப்பட வேண்டும் என நான் விரும்புகிறேன் என்றார்.

ஓடிச பிள்ளைகளுடன்

# அதிக நேரம் விளையாடுவோம்

**'ஓடிசம்' நிலை தொடர்பான விழிப்புணர்வு தினம் நேற்று (02) அனுஷ்டிக்கப்பட்டது**





திருமதி சஸ்ரூபி சதீஸ்
M.Phil in Nursing

வருடம் தோறும் 'ஓடிசம்' நிலை தொடர்பான விழிப்புணர்வு தினமாக ஏப்ரல் இரண்டாம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. 'ஓடிசம்' நிலையானது மனித மூளையின் கட்டமைப்பு மற்றும் தொழிற்பாடுகளில் ஏற்படும் அசாதாரணம் காரணமாக ஏற்படுகிறது. ஆகவே, 'ஓடிசம்' நிலையால் பாதிக்கப்பட்ட குழந்தைக்கு மூளையின் விருத்தி பாதிக்கப்படுகிறது.



'ஓடிசம்' குழந்தைகள் சமூகத்துடன் சேர்ந்து இயங்குதல் மற்றும் சமூகத்துடனாக தொடர்பாடலில் சிரமத்தை எதிர்கொள்வர். ஆகவே, இவ் வகையான பிள்ளைகளுக்கு விளையாட்டு செயற்பாடுகள், அவர்களுக்கும் சூழலுக்குமான பிணைப்பை அதிகரிக்கிறது. அதாவது விளையாட்டுகளின் மூலம் குழந்தையின் பாரிய இயக்க செயற்பாடு, நுண் இயக்க செயற்பாடு, சமூக திறன் தொடர்பாடல், திறன்-மொழி பேச்சாற்றல், நினைவாற்றல் மற்றும் பிரச்சினைகளை தீர்க்கும் திறன் கட்டியெழுப்பப்படுகிறது.

விளையாட்டுகள் ஆரம்பிக்க முதல், பிள்ளையுடன் நாம் சுமூகமானதும் சௌகரியமான உறவு முறையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு நாம் என்ன செய்யலாம் என்பதை யோசிப்போம்.

அதாவது, பிள்ளையின் பெயரைச் சொல்லி கூப்பிடுவதன் மூலம், நாம் அந்தப் பிள்ளைக்குத் தெரிந்தவராய் இருக்கிறோம் என்பதை, அப்பிள்ளைக்கு உணர வைக்க வேண்டும். அத்துடன் இலகுவான மொழி நடையில் தெளிவாகவும் ஆறுதலாகவும் கண் தொடர்பு வைத்து படங்கள், சைகைகளை வைத்து தொடர்பாடலை ஆரம்பிக்கலாம்.

அந்தப் பிள்ளை, எமது சம்பாஷணையை விளங்கி, அதற்கு மறுமொழியை சொல்ல, தேவையான நேரத்தை வழங்க வேண்டும். இவ்வாறு பிள்ளையுடன் பழகி, ஆயத்தமாகி விட்டால், என்னென்ன விளையாட்டுகளில் ஈடுபடலாம் என்பதை நோக்குவோம்.

எமது கலாசாரத்துக்கு ஏற்றதான பாரம்பரிய விளையாட்டுகளை முதன்மைப்படுத்துதல், பிள்ளைக்கும் பெற்றோருக்கும் வினைத்திறன் உள்ளதாய் அமையும். அதாவது எட்டுபெட், சங்கீத கதிரை, யானை நடை, முயல் பாய்தல், யானை ஊர்வலம் போன்றன உகந்தவையாகும்.

அத்துடன் மொழித் திறனை விருத்தி செய்வதற்காக கதை கூறல், சிறுவர் பாடல், சிறுவர் நாடகம் போன்றவற்றையும் மேற்கொள்ளலாம்.



இயக்க செயற்பாடுகளில் கூடுதலாக முன்னேற்றம் தேவைப்படும் பிள்ளைகளுக்கு உயரம் பாய்தல், நீளம் பாய்தல், பந்தெறிதல், ஓட்டம், ஓடிப்பிடித்தல், வழிகாட்டலுடன் கூடிய உடற்பயிற்சி போன்றவற்றை நெறிப்படுத்தலாம்.

இவ்வகையான விளையாட்டுகளின் மூலம், குழந்தையுடன் நேரம் செலவழித்த பின்னர், வரிசையாக நின்று கைகளைக் கழுவி சுய சுத்தம் பேணுவதற்கும் அமைதியாக ஆசனத்தில் அமர்ந்து, தமது சகபாடிகளுடன் வார்த்தைகளாலோ உடல் மொழி சைகைகளாலோ இவ்வளவு நேரமும் தாம் விளையாடிய விளையாட்டுகள் பற்றிய நினைவுகளை மீட்டுப் பார்க்க சந்தர்ப்பம் வழங்கலாம்.

'ஓடிச பிள்ளைகளுடன் விளையாட்டுகள் மூலம் அதிக நேரம் செலவழிப்போம்'



2027 இறுதிக்குள்

# கண்ணிவெடிகள் இல்லாத நாடாகும்



கண்ணிவெடி அகற்றும் இலங்கையின் இறுதி மூலோபாய ஒழுங்கமைப்பை வெளிப்படுத்திள்ளது. அதன்படி, 2027ஆம் ஆண்டு இறுதிக்குள் நாட்டை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்றுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் திரு.பிரசன்ன ரணதுங்கவின் ஆலோசனைக்கு அமைய கண்ணிவெடிகளை அகற்றும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படுகிறது என அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் மார்ச் (31) நடைபெற்ற இந்த வேலைத்திட்டத்தில் கலந்து கொண்ட தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் இந்நாட்டில் கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பான திட்டம் அமைச்சின் செயலாளரால் முன்வைக்கப்பட்டது.

ஜெனீவா சர்வதேச மனிதநேய கற்றலுக்கான கண்ணிவெடி அகற்றும் நிலையத்தின் ஆதரவுடன் கண்ணிவெடி அகற்றல் தேசிய செயற்பாட்டுத்திட்ட நிலையத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் கீழ், நாட்டை கண்ணிவெடிகளில் இருந்து விடுவிக்க தேசிய மற்றும் சர்வதேச பங்கா ளரர்களுடன் நெருக்கமாக பணியாற்ற இருப்பதாக அரசாங்கம் எதிர்பார்த்தள்ளது.

2002 ஆம் ஆண்டு முதல், கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டம் நாட்டில் இயங்கி வருகின்றதுடன், 2010 ஆம் ஆண்டு 'தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையம்' ஆரம்பிக்கப்பட்டது. கடந்த காலங்களில் பல்வேறு அமைச்சுக்களின் கீழ் இயங்கிய இந்த நிலையம் தற்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீள்குடியேற்றப் பிரிவின் கீழ் செயற்படுகின்றது. இது கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து, வழிநடத்துவதோடு கண்காணிக்கிறது.

இலங்கை இராணுவம் நாட்டில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்கு நேரடி பங்களிப்பை வழங்குவதோடு அது இலங்கை இராணுவத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் அலகுகள் மூலம் முன்னெடுக்கப்படுகின்றது. அதுமட்டுமின்றி இரண்டு சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் இரண்டு உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

நாட்டில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்காக இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் பிரிவுக்கு அரசாங்கம் நிதி உதவி வழங்குகிறது. மற்ற 4 அரசு சாரா நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் 17.5 மில்லியன் அமெரிக்க டொலர் இந்தத் திட்டத்திற்கு ஆதரவை வழங்கும் சர்வதேச அமைப்புகளிடமிருந்து வழங்கப்படுகிறது.

இதுவரை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 204 சதுர கிலோ மீற்றருக்கும் அதிகமான நிலப்பரப்பில் இருந்து கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு காணிகள் பொதுமக்களுக்காக விடுவிக்கப்பட்டுள்ளன. தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையத்தின்படி, கிட்டத்தட்ட 15 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட உள்ளன என்றும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கட்டானையில் ஆடைத் தொழிற்சாலையின்

# முகாமைத்துவ பணிப்பாளர் மீது தாக்குதல்

■ எம்.இஸட் ஷாஜஹான்

நீர்கொழும்பு, கட்டானை, கோப்பியவத்தை பிரதேசத்தில் அமைந்துள்ள Al-Obaidani Apparels தொழிற்சாலையின் முகாமைத்துவ பணிப்பாளரான ஓமானை சேர்ந்த Khalfan Salim Said Al Obaidani என்பவர் மீது வியாழக்கிழமை இரவு 11 மணியளவில் அவரது பங்களாவில் வைத்து, இனம் தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து, அவர் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பங்களாவின் காவலாளியும் சம்பவத்தின் போது தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார். ஐந்து பேர் கொண்ட குழுவினர் ஆயுதங்களுடன் வந்து, முகாமைத்துவ பணிப்பாளரை தாக்கியுள்ளனர்.



அத்துடன், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியையும் சேதப்படுத்தியுள்ளனர்; பங்களாவின் கண்ணாடிகளும் உடைக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பாக படல்கம பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

# வேண்டாமென விழிப்புணர்வு



ஏப்ரல் 01ஆம் திகதி உலக முட்டாள்கள் தினம். இத்தினத்தில் 'இன்னமும் புகைக்கும் உங்களில் சிலருக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகள்' எனும் தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் பல்வேறு விழிப்புணர்வு செயற்பாடுகள் மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தகவல் நிலையத்தால் முன்னெடுக்கப்பட்டன.

யாழ் நகரம், ஹட்டன், தலவாக்கலை நகரில் இளைஞர்கள் இணைந்து அன்றையதினம் வித்தியாசமான முறையில் வாழ்த்துகளை தெரிவித்திருந்தனர்.

# வறிய மக்களுக்கு அரிசி

■ எம்.இசட் ஷாஜஹான்

அரசாங்கத்தால் வறிய மக்களுக்கு வழங்கப்படும் 10 கிலோ கிராம் அரிசி வழங்கும் நிகழ்வு, நீர்கொழும்பில் சனிக்கிழமை (01) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நீர்கொழும்பு, உடையார் தோப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள சனசமூக நிலையத்தில், நான்கு கிராம சேவகவர் பிரிவுகளில் உள்ள ஆயிரம் குடும்பங்களுக்கு, நீர்கொழும்பு பிரதேச செயலாளர் அயேஸ் பெரேரா கலந்து கொண்டு பொதிகளை வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

உடையார் தோப்பு 160 பி , உடையார் தோப்பு 160 ஆம் இலக்கம், 159 ஆம் இலக்கம் பெரியமுல்ல, மஹா ஹுனுப்பட்டிய ஆகிய நான்கு கிராமசேவகர் பிரிவுகளை சேர்ந்தவர்களுக்கே அரிசிப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.



# அமர்ந்திருந்தவர் ரயில் மோதி பலி

தண்டவாளத்தில் நேற்று (02) அமர்ந்திருந்த ஒருவர் மீதி எரிபொருள் ரயில் மோதியதில் அவர் ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளார் என்று வாதுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாதுவ மொல்லிகொட, சாந்த பற்றிக் வீதியில் வசித்து வந்த குணசிங்க சமந்த சந்திரகுமார சில்வா (வயது 36) என்பவரே உயிரிழந்துள்ளார் இவர் ஒரு பிள்ளையின் தந்தையென பொலிஸார் தெரிவித்தனர்.

மருதானையிலிருந்து மாத்தறைக்கு எரிபொருள் ஏற்றிச்சென்ற ரயில் மொல்லிகொட பிரதேசத்தில் வைத்து குறித்த நபரை மோதியதால் அவர் உயிரிழந்ததுடன் சடலம் களுத்துறை வடக்கு ரயில் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் தொன்மையையும் தேசியத்தையும் சிதைக்கும்

# அரசாங்கத்தின் செயற்பாடுகளை எதிர்த்து

## எட்டு மாவட்டங்களிலும் மாபெரும் போராட்டம்

■ எஸ். தில்லைநாதன்

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட கலாசார அடிப்படையிலான இனப்படுகொலையை எதிர்த்து, பெரும் எதிர்ப்பு போராட்டத்தை வடக்கு - கிழக்கின் எட்டு மாவட்டங்களிலும் ஒரே நாளில் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அருகேயுள்ள தந்தை செல்வா நினைவு மண்டபத்தில் சனிக்கிழமை (01) மாலை நடந்த கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கட்சிகளான 'புளொட்' தலைவர் த. சித்தார்த்தன், 'ரெலோ' தலைவர் செல்வம் அடைக்கலநாதன், 'ஈ.பி.ஆர்.எல்.எவ்' தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் உள்ளிட்ட ஏழு தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகள் ஆகியோரும் தென்னிந்திய திருச்சபையின் பேராயர், வேலன் சுவாமிகள் ஆகியோருடன் 22 பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது, தமிழ் மக்களின் தொன்மையையும் தேசியத்தையும் சிதைக்கும் வகையில் கலாசார பண்பாட்டு மற்றும் சமூக விழுமியங்களை சிதைத்து நமது இருப்பை கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் சைவ ஆலயங்களை நிர்மூலமாக்கியும் அங்கு பௌத்த சின்னங்களை நிறுவியும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட கலாசார அடிப்படையிலான இனப்படுகொலையை எதிர்த்து, பெரும் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை வடக்கு - கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் ஒரே நாளில் முன்னெடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது. இதற்கான ஒழுங்குகளை முன்னெடுக்க குழுவும் அமைக்கப்பட்டது.

இதற்கான திகதிகள், விவரங்கள் என்பன ஏற்பாட்டு குழுவினரால் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



பிரதேசத்தில் கிடைக்கும் இலை, காய்கறிகளில்

# போசாக்கான உணவு

■ நிதர்சன் வினோத்

'குருதிச் சோகையை நிவர்த்தி செய்தல்' என்னும் தொனிப்பொருளிலான கண்காட்சி, அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (01) முன்னெடுக்கப்பட்டது.

குறைந்த செலவில், பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய இலைவகை மற்றும் காய்கறிகளுடன் போசாக்கை அதிகரிப்பது தொடர்பான கண்காட்சியை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை ஆகியன இணைந்து நடத்தின.

அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையை அண்டிய பிரதேசத்தில் வசிக்கும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு போசாக்கை மேம்படுத்துவதற்காக, முன்னெடுக்கப்பட்ட இந்தப் போசாக்கு உணவு கண்காட்சியில், இலை வகைகள், காய்கறி வகைகள் கொண்டு, பாரம்பரியமான முறையில் உணவைத் தயாரிப்பது தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.





ஆசிரியர் பாலநாதன் நகுலேஸ்வரியின்

## சேவை நலன் பாராட்டு விழாவும் மணிவிழாவும்

குமுழமுனை மகாவித்தியாலய சிரேஷ்ட இடைநிலைப்பிரிவு பகுதி தலைவராகவும், தமிழ் பாட ஆசிரியராகவும் கடமையாற்றிய பாலநாதன் நகுலேஸ்வரி ஆசிரியையின் சேவை நலன் பாராட்டு விழாவும் மணிவிழாவும் வெள்ளிக்கிழமை (31) மகாவித்தியாலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. பாடசாலை அதிபர் க. ஜெயவீரசிங்கம் தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் முல்லை வலய தமிழ் பாட உதவி கல்வி பணிப்பாளர் த. மதியழகன், குமுழமுனை மகாவித்தியாலய முன்னாள் அதிபர்களான சி. இராஜேஸ்வரன், ந. விஜயரட்ணம், முல்லை வலய வளவாளர் பீதாம்பரம் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

சண்முகம் தவசீலன்



# மகனின் பார்வைக்காக கையேந்தும் முன்னாள் போராளி

■ எஸ். றொசேரியன் லெம்பேட்

தமிழ் மக்களின் விடுதலைக்காக தனது 14 வயதில் ஆயுதம் ஏந்தி போராடி, தற்போது மாற்றுத்திறனாளியாகியுள்ள சிலுவைராசா என அழைக்கப்படும் தமிழ் கீதன், விடத்தல் தீவு பகுதியில் மிகுந்த வாழ்க்கை சவால்களுடன் வாழ்ந்துவருகின்றார்.

ஒழுங்காக நடக்க முடியாத நிலையிலும், தனது மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தை பராமரிப்பதற்காக, தனக்கு கிடைக்கும் கூலி வேலைகளுக்கு சென்று வருகிறார். ஆனால், நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என அனைத்தும் இவரின் வாழ்க்கையை கேள்விக் குறியாக்கியுள்ளன.

இவரின் மனைவி தனியார் நிறுவனம் ஒன்றில் சிறிய சம்பளத்தில் சுத்திகரிப்பு பணியாளராக வேலை செய்கின்றார். தமிழ் கீதனின் மூத்த மகள் உயர்தரத்தில் கல்வி பயில்கின்றார். இரண்டாவது மகன், விபத்து ஒன்றில் பாதிக்கப்பட்டு, எலும்பு முறிவு ஏற்பட்டு, அவரும் மாற்றுத்திறனாளியாக மாறியுள்ளார். அவரின் மூன்றாவது மகனும் பார்வை இல்லாத குழந்தையாகப் பிறந்துள்ளார்.



இவ்வாறு தானும் தன்னுடைய இரண்டு பிள்ளைகளும் மாற்றுத் திறனாளிகளாக இந்தப் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள முடியாத நிலையில் தவித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தன்னிடம் இருந்த படகு மற்றும் இதர சொத்துகளை விற்று, மகனின் பார்வைக்காக பல சிகிச்சைகளை மேற்கொண்ட போதிலும் சிகிச்சைகள் பலன் தராத நிலையில், மேலதிக சிகிச்சைகளை மேற்கொள்ள முடியாத நிலையில் வறுமையின் பிடியில் சிக்கி தவித்து வருகின்றார்.

தனக்கு ஆடம்பர உதவிகள் எதுவும் செய்யாவிட்டாலும் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவிக்கும் ஏதேனும் உதவிகளை புலம்பெயர் உறவுகள் வழங்க முன் வந்தால் தன்னுடைய குடும்பத்தையும் தன்னுடைய மகனின் சிகிச்சையையும் கொண்டு நடத்த உதவியாக இருக்கும் என கோரிக்கை விடுத்துள்ளார். தமிழ்கீதன் (சிலுவைராசா) (077) 518 4741.

சில நாள் இடைவெளியில் கிழக்கில் இரண்டாவது சம்பவம்

# மலசல குழியில் விழுந்து குழந்தை மரணம்

## பாதுகாப்பான குழிகள் குறித்து அதிகாரிகளின் பாராமுகம் ஏன்?

■ வி. சுகிர்தகுமார்



இரண்டரை வயது ஆண் பிள்ளை, பாதுகாப்பற்ற மலசல குழியில் வீழ்ந்து, பரிதாபகரமாக உயிரிழந்த சம்பம் அக்கரைப்பற்று, நாவற்காடு பிரதேசத்தில் நேற்று முன்தினம் (01) மாலை இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் சசிகுமார் சஸ்வந்த் எனும் குழந்தை பலியாகியுள்ளது.

உயிரிழந்த பிள்ளையின் தந்தை வெளிநாடொன்றில் தொழில் புரிந்துவரும் நிலையில், இரண்டு பிள்ளைகளின் தாயும் உயிரிழந்த பிள்ளையும் அயலில் உள்ள உறவினர் வீடொன்றுக்கு வழமைபோன்று சென்றுள்ளனர்.

அங்கு, பிள்ளையின் தாயார் உறவினர்களுடன் சிறு வேலையில் ஈடுபட்டிருந்த நிலையில், சுட்டித்தனம்மிக்க அப்பிள்ளை, யாரும் அவதானிக்காத சந்தர்ப்பத்தில் வெளியேறியுள்ளது. வெளியேறிய பிள்ளை அருகில் இருந்த வீடொன்றில் பாதுகாப்பற்ற முறையில் நிர்மாணிக்கப்பட்ட மலசல கூட குழியில் வீழ்ந்துள்ளது.

சில நிமிடங்களில் பிள்ளையைக் காணாத தாயும் உறவினர்களும் தேடியபோதும் பிள்ளை கிடைக்கவில்லை. ஆயினும் சந்தேகமடைந்த ஒருவர், அருகில் இருந்த மலசல கூட குழியில் இறங்கித் தேடியபோது, அக்குழியின் கீழே பிள்ளை கிடப்பதை அறிந்து, வெளியே எடுத்து, அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் பிள்ளை உயிரிழந்துள்ளது.

இதுபோன்ற சம்பவம், கண்ணகி கிராமத்திலும் அண்மையில் நடைபெற்றது. பாதுகாப்பற்ற முறையில் அமைக்கப்படும் இதுபோன்ற மலசல குழிகள் மூடப்படுவது மிக முக்கியம் என்பதை இச்சம்பவங்கள் உணர்த்துகின்றன. இது தொடர்பில் மக்களுக்கு அறிவூட்ட வேண்டியது சம்மந்தப்பட்டவர்களின் கடமை என்பதும் பெற்றோர்கள் தம் பிள்ளைகள் மீது அதிக கவனம் செலுத்த வேண்டி உள்ளதையும் இச்சம்பவங்கள் சுட்டிக்காட்டுகின்றன.



# காணிவேலில் மோட்டார்சைக்கிள் திருட்டு

■ கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் இடம்பெற்றுவரும் காணிவேல் விழாவுக்கு, களுவாஞ்சிக்குடியில் இருந்து குடும்ப சகிதமாக வியாழக்கிழமை (30) இரவு சென்று, வாகனம் பாதுகாக்கும் பகுதியில் மோட்டர்சைக்கிளை நிறுத்தி, அதற்கான 20 ரூபாய் பணத்தை வழங்கிவிட்டு, திறப்பை மோட்டர் சைக்கிளிலே மறந்துபோய் விட்டு விட்டு, காணிவேலுக்கு சென்றுவிட்டு திரும்பி வந்தபோது மோட்டார் சைக்கிள் காணமால் போயிருந்தது.

இதையடுத்து பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து, அந்த பகுதியில் வீதி சுற்றுவட்டத்தில் அமைந்துள்ள சி.சி.ரி.வி கமராவின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார், திருடப்பட்ட மோட்டர் சைக்கிளை விற்பதற்காக கொண்டுசென்ற நிலையில், திருடனை கைது செய்ததுடன் மோட்டர் சைக்கிளையும் மீட்டனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் செட்டிபாளையத்தைச் சேர்ந்த 35 வயதுடையவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கொழும்பு 'ஐஆர்சி' மட்டக்களப்பில் கைது

■ கனகராசா சரவணன்

பாடசாலை மாணவன் ஒருவன், கடந்த மாதம் 22ஆம் திகதி மட்டக்களப்பு நகர் பகுதி மத்திய வீதியிலுள்ள உணவு கடை ஒன்றின் முன்னால், சைக்கிளை நிறுத்திவிட்டு கடைக்குள் சென்று திரும்பிய வந்த போது, 30 ஆயிரம் ரூபாய் பெறுமதியான அந்தச் சைக்கிளைக் காணவில்லை.

இதையடுத்து பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து, சி.சி.ரி.வி கமெரா மூலம் திருடனை அடையாளம் கண்டநிலையில், பொதுச்சந்தையில் வைத்து கைதுசெய்தனர்.

இவர், கைதுசெய்யப்படும்போது, பிச்சைக்கார வேடம் பூண்டிருந்தார். விசாரணை செய்ததில், தெமட்டகொடை சேர்ந்த 43 வயதுடையவர் என்றும் கொழும்பில் ஏழு குற்றங்களில் குற்றஞ்சாட்டப்பட்டு, பொலிஸ் 'ஐஆர்சி' பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தவர் எனவும் தெரியவந்தது.



# இயற்கையோடு வாழ்வோம்


■ நூருல் ஹுதா உமர்

'இணைந்த வாழ்வை நாடுவோம்' எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு உரைகள் கல்முனைப் பிராந்திய ஆயுர்வேத பொறுப்பு வைத்திய அதிகாரி எம்.ஏ. நபீல் ஒருங்கிணைப்பில் சம்மாந்துறை ஆயுர்வேத வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி எம். சீ.எம் காலித் தலைமையில் டிராசத்துல் இஸ்லாமிய்யா அறபு கலாசாலையில் நடைபெற்றது.

பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல். எம் றிபாஸ், கௌரவஅதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனிபா, விசேட அதிதிகளாக சம்மாந்துறை வலய கல்வி பணிப்பாளர் டொக்டர் எஸ்.எம்.எம் சையத் உமர் மௌலானா, உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம். அஸ்லம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கிழக்கு பல்கலைக்கழகத்தின் புவியியல் பேராசிரியர்

■ வி.ரி சகாதேவராஜா



கிழக்கு பல்கலைக்கழகத்தின் கலை கலாசார பீடத்தின் புவியியல் துறையின் முதலாவது புவியியல் பேராசிரியராக கலாநிதி க. இராஜேந்திரம் பதவியுயர்வு பெற்றுள்ளார்.

கலாநிதி க. இராஜேந்திரம் மட்டக்களப்பு தேற்றாத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது பாடசாலைக் கல்வியை தேற்றாத்தீவு சிவகலை வித்தியாலயம், தேற்றாத்தீவு மகா வித்தியாலயம், பட்டிருப்பு தேசிய பாடசாலை ஆகியவற்றில் பயின்றுள்ளார். பின்னர், யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் புவியியல் துறையில் சிறப்புக் கற்கையை மேற்கொண்டு முதன்மை தேர்ச்சி பெற்று யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையில் விரிவுரையாளராக பணிபுரிந்துள்ளார்.

தனது முதுதத்துவமாணிப் பட்டத்தைப் யாழ் பல்கலைக்கழகத்திலும் கலாநிதிப் பட்டத்தை புதுடெல்லி ஜவகர்லால்நேரு பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார். பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் இயங்கும் CSSTEAP இன் புலமைப்பரிசில் பெற்று புவியியல் தகவல் ஒழுங்கு மற்றும் தொலையுணர்வு நுட்பத்தில் (GIS & RS) பட்டப்பின் டிப்ளோமாவினை பெற்றதுடன் பின்னர் எண்ணியல் வானிலை எதிர்வுகூறல் (NWP) தொடர்பான கற்கையையும் IIRS இல் பூர்த்திசெய்துள்ளார்.

2008ஆம் ஆண்டு கிழக்குப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராக (தரம் 1) இணைந்து கொண்டார். புவியியல் துறையின் தலைவராகவும், கலை கலாசார பீடத்தின் பீடாதிபதியாகவும் பணிபுரிந்துள்ளார். உயர்கல்வி முகாமைத்துவம் தொடர்பான பயிற்சியை தாய்லாந்தில் பெற்ற இவர், பீடாதிபதியாக இருந்த காலத்தில் கலை கலாசார பீடத்தில் கலைத்திட்ட மாற்றம், மாணவர் கணினி ஆய்வுகூடவசதிகள், கலையரங்க வசதிகள், புதிய துறை, புதிய பணியிட உருவாக்கம் என பலமுக்கிய அவிருத்திப் பணிகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.







# கராஜுக்குள் கொலைக்களம்

■ மொஹமட் ஆஸிக்

அக்குறணை, குருகொட பிரதேசத்தில் வாகனம் பழுது பார்க்கும் இடம் ஒன்றை நடத்தும் போர்வையில் சட்டவிரோதமாக மாடுகளை அறுக்கும் இடமொன்றை (கொலைக்களம்) நடத்திய மூவரை அலவத்துகொடை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் அவசர பிரிவுக்கு நேற்று (02) கிடைத்த தகவலின் பிரகாரம் அவ்விடத்துக்குச் சென்றபோது, இந்தச் சட்டவிரோதமாக மாடு அறுக்கும் இடத்தைபொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த இடத்தை வாகனம் பழுது மார்ப்பதற்காக (கராஜ்) வாடகைக்கு விடப்பட்டதாகவும், இதிலுள்ள உள் அறை மாடுகளை வெட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.



மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது வெட்டப்பட்ட மாட்டின் சுமார் 147 கிலோ கிராம் இறைச்சி மற்றும் இவ்விடத்தை வாடகைக்கு எடுத்தவர் மற்றும் மாட்டை அறுப்பதற்கு உதவிய இருவர் உட்பட மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸார் கைப்பற்றிய மாட்டிறைச்சி தொடர்பில் பொதுச் சுகாதார பரிசோதகரின் அறிக்கையைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், கைது செய்யப்பட்ட மூன்று சந்தேக நபர்களையும் கண்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அலவத்துகொட பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் சுஜீவ குணதிலக்கவின் பணிப்புரையின் பேரில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் நிலைய பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் உபாலி கருணாவன்ச, சார்ஜன்ட் சமரகோன், ஜயந்த, செனரத் ஆகியோரால் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

## வந்தது வசந்தகாலம் வாருங்கள் மகிழுங்கள்

■ டி.சந்ரு

நுவரெலியா மாநகர சபை கலைக்கப்பட்ட போதிலும் விசேட ஆணையாளரின் தலைமையில் ஏப்ரல் வசந்த கால களியாட்ட நிகழ்வுகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நுவரெலியாவில் வருடம் தோறும் நடைபெறும் ஏப்ரல் வசந்த கால களியாட்ட நிகழ்வுகள் ஏப்ரல் 1ஆம் திகதி சனிக்கிழமை காலை கிறகறி வாவி கரையில் பாடசாலை மாணவர்கள் மற்றும் முப்படையணியினரின் பேண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் கோலாகலமாக ஆரம்பமாகியது.

நுவரெலியா மாநகர சபை விசேட ஆணையாளர் சுஜீவ போதிமான தலைமையில் ஆரம்பமாகிய ஏப்ரல் வசந்த கால களியாட்டு நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரட்ன, சிறப்பு அதிதியாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட உட்பட பெருந்திரளான பொது மக்களும் கலந்து கொண்டார்கள்.

கடந்த வருடங்களை விட இம்முறை பெருந்திரளான சுற்றுலா பயணிகள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. நுவரெலியாவிலுள்ள சுற்றுலா ஹோட்டல்களிலும் சுற்றுலா விடுதிகளிலும் முன்கூட்டியே பதிவுகள் செய்துள்ளதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

நுவரெலியாவில் ஏப்ரல் வசந்த காலத்தை கழிப்பதற்காக வருகைதரவிருக்கும் சுற்றுலா பயணிகளின் நலன் கருதி அடிப்படை வசதிகளை நுவரெலியா மாநகர சபை செய்து கொடுப்பதற்கும் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பிற்காக நுவரெலியா பொலிஸார் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஏப்ரல் வசந்தகால நிகழ்வுகள்

ஏப்ரல் 30 வரை: விளையாட்டு, மலர் கண்காட்சி போட்டிகள்
ஏப்ரல் 8,9: மாகாஸ்தோட்ட மலை ஏறும் மோட்டார்கார் போட்டி
ஏப்ரல் 10,11 : சிங்கல் றீ மலை ஏறும் போட்டி
ஏப்ரல் 15, 16 மோட்டகுரோஸ் ஓட்டப்போட்டி
ஏப்ரல் 15, 23 குதிரைப்பந்தய போட்டி
ஏப்ரல் 17, 18 விக்டோரியா பூங்காவில் மலர் கண்காட்சி போட்டி
ஏப்ரல் 21, 22 நுவரெலியா வாவி கரைசேற்றில் ஜீப் ஓட்டப்போட்டி
ஏப்ரல் 22- 30 நுவரெலியா மாநகர சபை விளையாட்டு உள்ளகரங்கில் அகில இலங்கை (பெட்மிடன்) பூப்பந்தாட்டம் போட்டி உட்பட பல நிகழ்ச்சிகள் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.




## மின்சார பில் விண்ணில் மக்களோ கடும் இருட்டில்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

அதிகரிக்கப்பட்டுள்ள மின் கட்டணத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஹட்டன் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில், நேற்று (02) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதில், 'மின்சார பில் விண்ணில், மக்களோ கடும் இருட்டில்', 'அமைச்சர்களுக்கு வரிச்சலுகை, மக்களுக்கு மின் அதிர்ச்சி' உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளர் மஞ்சுள சுரவிஆராச்சி இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மழைவேண்டி புத்தருக்கு பூஜை



■ செ.தி.பெருமாள்

கடந்த சில மாதங்களாக மத்திய மலைநாட்டில் கடும் வரட்சியான வானிலை நிலவுகின்றது. இதனால் நீர்த் தேக்கங்களின் நீர்மட்டம் அதன் கொள்ளளவை விட குறைந்துள்ளது.

இதனால் நீரில் மூழ்கியிருந்த ஆலயங்கள் அனைத்தும் வெளியில் தென்படுகின்றன. அங்கு செல்லும் மக்கள் வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மஸ்கெலியாவில் தென்படும் புத்த பகவான் சிலைக்கும், அங்கு அக்காலத்தில் இருந்த அரச மரத்தின் அடிப்பகுதிக்கும் விசேட பூசைகள் மேற்கொள்ளப்பட்டன.

நிகழ்வில் ரக்காடு கிராமத்தில் உள்ள பௌத்த விஹாரையின் தேரர் மற்றும் அங்கு உள்ள அதிரடி படையினர் கிராம மக்கள் இன, மத பேதமின்றி பூஜையில் கலந்து கொண்டனர்.



## இலவச அரிசி கையளிப்பு

■ பி.கேதீஸ்

அரசாங்கத்தின் இலவச அரிசி வழங்கும் வேலைதிட்டத்துக்கு அமைய அம்பகமுவ பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட இஞ்ஞஷ்ரி, டில்லரி, ஓல்டன், இஸ்ரஸ்பி, மாநெலி, புரோன்லோ, மஸ்கெலியா ஆகிய கிராம சேவகர் பிரிவிலுள்ள 3,750 க்கு மேற்பட்ட பயனாளர்களுக்கு இலவசமாக அரிசி பொதிகள் மார்ச் 31ஆம் திகதி வழங்கிவைக்கப்பட்டன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஆலோசனைக்கு அமைவாக இ.தொ.காவின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான மருதப்பாண்டி ராமேஷ்வரனால் இவை வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் அம்பகமுவ பிரதேச செயலாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சிவனடியில் பெண் சரணம்

■ செ.தி.பெருமாள்

களனி பகுதியைச் சேர்ந்த 69 வயதான புஸ்பரோகினி, சிவனொளிபாத மலைக்கு தரிசனம் செய்ய செல்லும் வழியில் மரணமடைந்துள்ளார்.

சிகப்பு அம்பலம் பகுதியில் வைத்து திடீரென ஏற்பட்ட நெஞ்சு வலியை அடுத்து, அம்புலன்ஸ் மூலம் மஸ்கெலியா பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அனுமதிக்கப்பட்ட போதும் ஏற்கெனவே அவர் இறந்துவிட்டார்.

மஸ்கெலியாவில் திடீர் மரண விசாரணை அதிகாரி இன்மையால், அவரது சடலம் டிக்கோயா-கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லபட்டு, அங்கு சட்ட வைத்திய அதிகாரி முன்னிலையில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.





## ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா கோட்டக்கல்வி இரண்டாம் வலையத்துக்கு உட்பட்ட லிந்துலை நாகசேன ரோயல் கல்லூரி ஆரம்ப கல்லூரியில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி அதிபர் எம்.ஜேசுதாஸன் தலைமையில் சனிக்கிழமை (01) இடம்பெற்றது.

இக்கல்லூரியில் 2022 ஆம் வருடம் தரம் ஐந்து புலமை பரிசில் பரீட்சையில் தோற்றிய மாணவர்கள் மற்றும் சித்தி பெற்ற மாணவர்களுக்கு பதக்கம் அணிந்து கௌரவிக்கப்பட்டனர்.

அதேநேரத்தில் கல்வி சேவையில் 35 வருடங்களை பூர்த்தி செய்து ஓய்வு பெறும் லிந்துலை சரஸ்வதி தமிழ் மகா வித்தியாலய அதிபர் திருமதி ந.தமிழரசியின் சேவையை பாராட்டி கௌரவிப்பும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக நுவரெலிய கல்வி வலையத்தின் உதவி பணிப்பாளர் எம். கணேஷ்ராஜ், நிகழ்வின் அனுசரணையாளரான வெஸ்டர்ன் மென்பவர் நிறுவன தலைவர் திருமுடி ரகு பங்கேற்றிருந்தார். அத்துடன் அயல் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## 'ஹரிவராசனம்' நூற்றாண்டு விழா

அகில இலங்கை சபரிமலை குருசுவாமிகள் ஒன்றியத்தால் நடத்தப்பட்ட 'ஹரிவராசனம்' நூற்றாண்டு விழா, கொழும்பு புதிய நகர மண்டபத்தில் சனிக்கிழமை (01) நடைபெற்றது

இந்நிகழ்வில் குருசாமி ஒன்றிய தலைவர் ஆறுமுகம் ரவீந்திரன் குருசாமி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் உட்பட ஐயப்ப பக்த அடியார்களும் கலந்து கொண்டனர்.



# கபளீகரத்துக்கு எதிராக களத்தில் குதித்த ஜீவனிடம் ஒரு வேண்டுகோள்

சிறுபான்மையின மக்களின் மத அடையாளங்களை இல்லாதொழித்து, அந்தந்த இடங்களை கபளீகரம் செய்தற்கான சூட்சுமமான முன்னெடுப்புகள் ஒருபுறம் அரங்கேற்றப்படும் ஏகநேரத்தில், அச்சுறுத்தி அதிரடியாக கைப்பற்ற முயற்சிகளும் சம்பவங்களும் இடம்பெறாமல் இல்லை. இவையெல்லாம், ஓர் அரசமரத்தையும், புத்தர் சிலையையும் கொண்டே முன்னெடுக்கப்படுகின்றன.

இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது என அப்பட்டமாகவே ஜனாதிபதி அறிவித்திருக்கும் நிலையில், மதங்களுக்கு இடையில், அன்றேல் சிறுபான்மையினங்களை சண்டைக்கு வலிந்து இழுக்கும் வகையில், பௌத்த தேரர்கள் செயற்படுகின்றனர். இவை தீர்வுத்திட்டம், நிம்மதியான வாழ்வு, சகோதரத்துவம், எதிர்காலம் உள்ளிட்டவற்றை கேள்விக்கு உட்படுத்தியுள்ளன.

தமிழ், முஸ்லிம்கள் சிறுபான்மை இனங்கள் என்பதை யாரும் மறுதலிக்கவில்லை. அவர்களுக்கும் இந்நாட்டில் வாழும் உரிமை உள்ளது. தங்களுடைய மதங்களை பின்பற்றும் கடப்பாடுகளை அவர்கள் கொண்டிருக்கின்றனர். ஆனால், சிறுபான்மையின மதச் சின்னங்களை அழித்தொழித்து அவ்விடங்களில் தொல்பொருள் இருக்கின்றனவென அடையாளப்படுத்தி, பௌத்த விகாரைகளை கட்டுவது எவ்விதத்திலும் நியாயமானது அல்ல.

ஏனைய இன, மதங்களைச் சார்ந்த தொல்பொருட்கள் ஏன் இருக்கக்கூடாது. பௌத்த மதச் சின்னங்கள் மட்டும்தான் தொல்பொருளா? அவ்வாறு இருந்தால்கூட, தமிழ் பௌத்தம் இலங்கையில் பரவி இருந்ததை இவர்கள் அறியமாட்டார்களா?

கச்சத்தீவில் புத்தர் சிலை வைக்கப்பட்ட விவகாரம் சூடுபிடித்திருந்த நிலையில், அங்கிருக்கும் கடற்படையினர் வணங்குவதற்காக சின்ன சிலையொன்று வைக்கப்பட்டுள்ளதாக கடற்படை விளக்கமளித்திருந்தது. அந்த சூடு தணிவதற்குள் வெடுக்குநாறி விவகாரம் தலைதூக்கிவிட்டது.

வடக்கு, கிழக்கில் கேந்திர நிலையங்களில் பௌத்த விகாரைகளை கட்டும் செயற்பாடுகளை அரவமின்றி முன்னெடுப்பதற்காக, வெடுக்குநாறியை கிளறி, அதிலிருந்து கிளம்பும் வெப்பத்தில் குளிர்காய்வதற்கு முயன்றிருக்கலாம்.

ஆனால், புல்மோட்டை, பொன்மலைக்குடாவில், புத்தர் சிலையை நிறுவதற்காக பௌத்த தேரர்கள் அப்பட்டமாகவே சென்றிருந்தனர். அதற்கு பிரதேசவாசிகள் கடும் எதிர்ப்பை வெளிக்காட்டினர். தேரர்களுடன் சென்றிருந்த அமைச்சர் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்தவர், கைத்துப்பாக்கியை காண்பித்து சுடுவதாக எச்சரித்துள்ளார்.

நாடு பொருளாதார ரீதியில் அதள பாதாளத்துக்குள் விழுந்து கிடக்கிறது. அதிலிருந்து மீண்டெழ வேண்டுமாயின் சகலரும் ஓர் அணியில் திரளவேண்டும். இனங்களுக்கு இடையில் வெறுப்புணர்வுகளை ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டால், குரோதங்கள் வலுப்பெறும்.

கடும் சர்ச்சைக்கு உள்ளாக்கியிருக்கும் வவுனியா, வெடுக்குநாறி மலைக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் சென்றிருந்தார். மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை களத்துக்குச் சென்று, தனது தந்தையான அமரர் ஆறுமுகன் தொண்டமான் தட்டிக்கேட்பதைப் போல், களத்தில் குதித்துள்ளார் ஜீவன்; அவரது கரங்களை பலப்படுத்த வேண்டும்.

அதேபோல, இன, மத பதட்டங்களைத் தூண்டும் இதுபோன்ற சம்பவங்களைத் தடுப்பதற்கான பொறிமுறை தொடர்பில், அமைச்சரவையில் ஜீவன் தொண்டமான் பிரஸ்தாபிக்க வேண்டும் என வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



# ‘சிஸ்டம் சேன்ஞ்’காரர்களும் தமிழ் மக்களும்



என்.கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan

கோட்டாபய ராஜபக்‌ஷவின் பிறழ்வாட்சியின் கீழ், நாடு அதளபாதாளத்தில் விழுந்து ஸ்தம்பித்து நின்ற போது, கோட்டாபயவை விரட்டியடிக்க, பொதுமக்கள் தாமாக வீதிக்கு இறங்கிப் போராடினர். இது இலங்கையின் வரலாற்றில் மிக முக்கியமானதொரு மக்கள் எழுச்சியாகும்.

இந்த மக்கள் எழுச்சிக்கு தலைமை, அல்லது தலைவர்கள் என்று யாருமிலர். நாடெங்கிலும், ஆங்காங்கே மக்கள் தாமாகக் கூடி, தமது கடும் எதிர்ப்பைப் பதிவு செய்தனர். மக்கள் போராட்டங்களையும் ‘அறகலய’ என்ற சொல்லையும் தாம் மட்டுமே குத்தகைக்கு எடுத்துள்ளதாக, தமக்குள் மிக ஆழமாக நம்பிக்கொண்டிருக்கும் இலங்கையின் இடதுசாரிக் கூட்டம், இந்த மக்கள் எழுச்சியை தம்முடையதாக்க பகீரதப் பிரயத்தனப்பட்டன.

பொதுமக்கள் தாமாகக் கூடும் இடங்களை, இந்த இடதுசாரிக் கூட்டங்கள், கொஞ்சம் கொஞ்சமாக ஆக்கிரமிக்கத் தொடங்கின. தம்முடையவர்களையும், தம்மோடு இயைந்து இயங்கக்கூடிய அரசியல் ஆசையுள்ள சிலரையும், வேறு நிகழ்ச்சிநிரலில் மக்கள் போராட்டத்தில் சங்கமித்துள்ள ஏனைய சக்திகளையும் ஒன்றிணைத்து, இந்த இடதுசாரிகள் ‘மக்கள் போராட்டத்தை’ கையகப்படுத்த செய்த கைங்கரியங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

ஏதோ ‘கோட்டா கோ ஹோம்’ போராட்டத்தை தாமே தலைமையேற்று நடத்துவது போல, தினம் தினம் ஊடகங்களுக்கு கருத்துச் சொல்வதும், ‘போராட்டக்காரர்களின் கோரிக்கைகள்’ என்று தமது கோரிக்கைகளை முன்வைப்பதுமாக ‘அறகலய’ என்பதை தம்முடையதாக்கினர்.

அதுவரை காலமும், மிக அமைதியான வழியில் இடம்பெற்ற சாதாரண பொது மக்களின் மக்கள் எழுச்சிக்குள் வன்முறையும் பொதுச் சொத்துகளுக்கு சேதம் விளைவிக்கும் ஒழுங்கீனமும் இடதுசாரிகள் மக்கள் போராட்டத்தைக் கைப்பற்றிய பின்னர் நடந்தவை.

ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க மக்கள் எழுச்சியை, வன்முறை வெறியாட்டமாக்கியதில் ராஜபக்‌ஷர்களுக்கு எவ்வளவு பங்கிருக்கிறதோ, அதேயளவு பங்கு இந்த இடதுசாரிக்கூட்டங்களுக்கும் இருக்கிறது. இது அமைதி வழியில், அதுவரை காலமும் நடத்தப்பட்ட மக்கள் போராட்டத்தின் அறத்தைக் குலைத்து, அதனை நாசமாக்கியது என்பதுதான் உண்மை.

மக்கள் எழுச்சியின் பின்னர் கோட்டா பதவி விலகிய பின்னர், நாட்டைக் கட்டியெழுப்ப புதிய ஜனாதிபதிக்கு வாய்ப்பளிக்க சாதாரண பொதுமக்கள் போராட்டங்களிலிருந்து விலகிய போதும் கூட, ‘சிஸ்டம் சேன்ஞ்’ என்ற வார்த்தையைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு, இந்த இடதுசாரிகளும் அவர்களோடு கைகோர்த்துள்ள அரசியல் ஆசையுள்ள சிலரும், வேறு நிகழ்ச்சிநிரலில் மக்கள் போராட்டத்தில் சங்கமித்துள்ள ஏனைய சக்திகளும் தொடர்ந்து போராட்டங்களை நடத்த பகீரதப் பிரயத்தனப்பட்டுக் கொண்டு இருக்கின்றன.

ஆனால், மக்கள் விளித்துவிட்டார்கள். ஆனாலும், விடாமல் ஏதோ ‘சிஸ்டம் சேன்ஞ்’ கொண்டுவரப்போவதாக அடிக்கடி போராட்டங்களையும் வேலைநிறுத்தங்களையும் குழறுபடிகளையும் நடத்தி, நாடு பொருளாதாரப் பிறழ்விலிருந்து மீள்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கோட்டா ஐ.எம்.எப்க்குப் போகவில்லை; உடனடியாக ஐ.எம்.எப்இன் உதவியைப் பெற வேண்டும் என்று அன்று பொதுமக்கள் வீதிக்கிறங்கி போராடினார்கள். இன்று இந்த இடதுசாரிகள், “அரசாங்கம் ஐ.எம்.எப்பற்கு போகிறது; ஐ.எம்.எப்பற்கு போகக் கூடாது; அதனை நாம் அனுமதிக்க மாட்டோம்” என்று போராடுகிறார்கள்.

இந்த இடதுசாரிகளுக்கு நாடு பொருளாதாரப் படுகுழியிலிருந்து மீள வேண்டும்; மக்கள் ஓரளவேனும் நிம்மதியாக வாழ வேண்டும் என்றெல்லாம் விருப்பமில்லை. நாடு இன்னும் இன்னும் மோசமடைய வேண்டும். அதனால் விரக்தியுறும் மக்கள், அதிகாரத்தை எப்படியாவது இடதுசாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அதிகாரப்பித்துப் பிடித்து அலைந்துகொண்டிருக்கிறார்கள். நிற்க!

இந்த இடதுசாரிகள், ‘அறகலய’வின் போது, இன சௌஜன்யம் பற்றி நிறையப் பேசினார்கள். அதற்கான அடையாளமாகத் தமிழராக ஒன்றிரண்டு பேரை தம்முடைய மேடைகளில் ஏற்றியும் வைத்திருந்தார்கள். இந்த அடையாளம் தமிழர்களும், தாம் ஏதோ தமிழ் மக்களின் பெரும் பிரதிநிதிகள் போன்று எண்ணிக்கொண்டு அறிக்கைகள் விட்டுக்கொண்டும், ஊடகங்களுக்கு கருத்துச் சொல்லிக்கொண்டும், இடதுசாரிக் கூட்டத்தின் கீழ் ‘சிஸ்டம் சேன்ஞ்’ வந்தால், தமிழ் மக்களுக்கு உய்வு வரும் என்றும் கருத்துச் சொல்லிக்கொண்டு திரிகிறார்கள்.

இந்த அடையாளத் தமிழர்களுக்கு, அரசியல் ஆசை இருக்கிற அளவுக்கு அரசியல் அறிவு இல்லை. வீதியில் இறங்கிப் போராடுவதும், கைதுசெய்யப்படுவதும், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிப்பதும், சர்வதேச தன்னார்வ நிறுவனங்களைச் சேர்ந்த நான்கு பேரைச் சந்தித்துப் பேசுவதும் அரசியல் என்று நம்பிக்கொண்டிருக்கிற, அதனால் தம்மால் பெரும் மாற்றத்தைச் சாதித்துக்கொள்ள முடியும் என்று மக்களுக்குக் காட்டி எதிர்காலத்தில் அரசியல் பதவிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புகிற சிறுபிள்ளைத்தனமான சிந்தனையாகும்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கான மதிப்பும் மரியாதையும் இந்த அடையாளத் தமிழர்களுடன் கைகோர்த்து நிற்கும் ‘சிஸ்டம் சேன்ஞ்’காரார்களால் கூட வழங்கப்படாது என்பதற்கான மிக நல்ல உதாரணம் அண்மையில் இடம்பெற்றது.

‘சிஸ்டம் சேன்ஞ்’காரார்களின் முன்னிலை அமைப்புகளுள் ஒன்றான அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், அதன் அழைப்பாளர் வசந்த முதலிகேயின் தலைமையில், யாழ். பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரைச் சந்தித்திருந்தனர்.

இதன்போது, யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் அழகராசா விஜயகுமாரால், வசந்த முதலிகேயிடம் தமிழ் மக்கள் சார்பான சில கோரிக்கைகளை முன்வைத்திருந்ததாக ஊடகவியலாளர் குமணன் பதிவுசெய்திருக்கிறார். தமிழ் மக்கள் வடக்கு-கிழக்கை பூர்வீகமாகக் கொண்ட, தனித்த மொழி, மத, கலாசார அடையாளம் கொண்ட மக்கள் கூட்டம்; இணைந்த வடக்கு-கிழக்கு தமிழ்மக்களின் தாயகம்; தமிழ் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையுண்டு; அதன்பாலாக தமிழ் மக்களுக்கு தமது அரசியல் அடைவைத் தீர்மானிக்கும் உரிமையுண்டு; சர்வதேசக் கண்காணிப்புக்கு உட்பட்ட சர்வசனவாக்கெடுப்பு ஒன்றின் மூலம் தமது அரசியல் அடைவை தமிழ் மக்கள் தீர்மானிக்க முடியும்; யுத்தக் குற்றம், மனிதவுரிமை மீறல் உள்ளிட்டவற்றுக்கு சர்வதேச பொறிமுறையின் கீழான விசாரணை நடத்தப்பட வேண்டும்; தமிழர் தாயகத்தை முற்றுகையிட்டுள்ள படைகள் விலக்கிக்கொள்ளப்பட வேண்டும்; இலங்கை அரசியலமைப்பின் ஆறாம் திருத்தம் நீக்கப்பட வேண்டும்; பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் இல்லாதொழிக்கப்படுவதுடன் அதன் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளோர் விடுதலை செய்யப்பட வேண்டும்; இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதன் மூலமே பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட முடியும் என்பவையெல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதே அவர்கள் வசந்த முதலிகேக்கு வழங்கிய கோரிக்கைகளின் சாரம் என்று ஊடகவியலாளர் குமணன் பதிவுசெய்கிறார்.

இதனை வசந்தவும், அவரது ‘சிஸ்டம் சேன்ஞ்’ தோழர்களும் ஏற்கலாம்; அல்லது நிராகரிக்கலாம். அவர்கள் ஏற்றுக்கொள்வது என்பது சாத்தியமில்லாதது. இலங்கையின் இடதுசாரிகளில், சிறுபான்மையினர் அல்லாதவர்களில் பெரும்பான்மையினர் சிங்கள-பௌத்த தேசியவாதிகளும்கூட!

இலங்கையின் மிகப் பெரிய மாக்ஸிஸக் கட்சியான ஜே.வி.பிதான் இலங்கையின் மிகப்பெரிய பேரினவாதக் கட்சியும் கூட. அவர்களுக்கு கிடைக்கும் கொஞ்சநஞ்ச வாக்குகளும் ஆதரவும் கூட, பேரினவாத இடதுசாரி வாக்குகள்தான்.

தமிழ் மக்களின் மேற்சொன்ன கோரிக்கைகளை ஏற்பது அவர்களால் என்றுமே முடியாத காரியம். சரி! அப்படியானால், இது எம்மால் முடியாது என்று நிராகரித்திருக்கலாம். அது குறைந்தபட்ச நேர்மையையாவது பிரதிபலித்திருக்கும். ஆனால், ஊடகங்களுக்கு அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், தமக்கு யாழ்ப்பாணத்தில் எந்தக் கோரிக்கையும் யாராலும் விடுக்கப்படவில்லை என்று அறிக்கைவிடுகிறார்கள்! அப்படி கோரிக்கை தரப்பட்டதாகச் சொல்லும் செய்தி பொய் என்கிறார்கள். இதுதானா இவர்களின் ‘சிஸ்டம் சேன்ஞ்’? இலங்கையில் ஆட்சிபீடமேறிய ஏனைய அரசியல்வாதிகளை விட, இவர்கள் எந்த வகையில் மேம்பட்டவர்கள்?

இலங்கையின் அரசியலைப் புரிந்துகொள்ள, இலங்கையின் வரலாற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். இலங்கையின் இன முரண்பாட்டைப் புரிந்துகொள்ள, இலங்கையின் இனங்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். விடயம் முழுமையாகத் தெரிந்தால்தான், பிரச்சினையின் தன்மை விளங்கும். பிரச்சினையின் தன்மை புரிந்தால்தான், தீர்வுக்கான வழிபற்றி சரியாக யோசிக்கவேனும் முடியும்.

இது எதுவுமே தெரியாமல், புரியாமல், சும்மா ‘சிஸ்டம் சேன்ஞ்’, ‘சிஸ்டம் சேன்ஞ்’ என்று கத்துவதாலும், ஊடகங்களுக்குக் கருத்துச் சொல்லி தம்மைப் பெரும் அரசியல் சக்தியாக எண்ணிக்கொள்வதும் யாருக்கும் எந்தப் பயனையும் தராது. இதனை இந்த ‘சிஸ்டம் சேன்ஞ்’காரர்களோடு கைகோர்த்துக்கொண்டு, நிற்கும் அடையாளத் தமிழர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.



## வாழ்வியல் தரிசனம்

ஞானத்தைத் தேட விளைபவர்கள் பண்பு, பக்தியில் உயர்நிலையில் திளைத்தவர்களாகவும் நிறைந்த இதயம் கொண்டவர்களாகவும் விளங்கிட வேண்டும்.

ஞான உரை சொல்லும் கோடீஸ்வரர்கள், தங்களை ‘ஞானி’ என எண்ணிக் கொள்கின்றார்கள். வெட்கமே இன்றி தங்களை ‘குரு’ என்கின்றார்கள். இத்தகையவர்களின் மாளிகை மட்டுமல்ல, கோடானு கோடி பணம், வாகனங்கள், உடைகள் என்பவை ஞானிகளுக்கானவை அல்ல!

இவர்கள் உரையில் தங்களுக்கு எல்லாமே தெரியும் என்பது போலவும் புரியாத பாஷையில், நடிப்புடன் உலகைச் சுற்றிவருகின்றார்கள்.

பணக்கார சீஷ்யர்கள் அவர்களின் பேச்சு புரிவதாக நடிக்கிறார்கள். அவர்களை “குருஜி..குருஜி” எனச் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். ஞானிகளுக்கு எதற்கு செல்வம், விளம்பரம்? வானொலி, தொலைக்காட்சி விளம்பர நிகழ்ச்சிகளுக்கான செலவுகள் எதற்கு?

பரப்பிரம்பத்தை எளிதாக உணரமுடியாது. எந்த மதத்தவர்களும் இறைவனுக்குப் பொதுவானவர்கள். இறைவன் அருள் இன்றி, ஞானம், தவம் மிளிராது. உள்ளம் உருக வேண்டும்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பழம்பெரும் பயணிகள் தரிப்பிடம் இடித்தழிப்பு

சாவகச்சேரி நகர சபைக்கு உட்பட்ட மீசாலை சந்தியில் உள்ள 50 வருடங்களுக்கு மேற்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த பயணிகள் தரிப்பிடத்தை, சாவகச்சேரி நகரசபை முற்றாக இடித்து அழித்துள்ளது.

மீசாலை சந்தியில் பழைய ரயில் நிலையம் அமைந்திருந்த காலத்தில் இருந்து, தென்மராட்சி மக்களின் வாழ்வியலோடு ஒன்றித்திருந்த பயணிகள் தரிப்பிடமே சாவகச்சேரி நகர சபையின் கனரக இயந்திரம் மூலம் முற்றாக இடித்து அழிக்கப்பட்டுள்ளது.

1995 இடப்பெயர்விலும் யுத்த காலத்திலும் அதற்கு முன்னரும், யாழ்ப்பாண மக்களின் பல்வேறு வரலாற்று உணர்வுகளின் அடையாளமாக, குறித்த பஸ் தரிப்பிடம் விளங்கியது.

குறித்த பயணிகள் தரிப்பிடம், ஏ 9 பிரதான வீதி புனரமைக்கப்பட்ட போதும், ரயில் பாதை அமைக்கப்பட்ட போதும் இரண்டு திணைக்களங்களாலும் இடித்து அகற்றப்படாமல் பாதுகாக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், சாவகச்சேரி நகர சபையின் மக்கள் பிரதிநிதிகள், சபை கலைக்கப்பட்டு 10 நாள்களுக்குள் மீசாலையின் அடையாளமாக திகழ்ந்த பயணிகள் தரிப்பிடம் அழிக்கப்பட்டமை, தென்மராட்சி மக்கள் மத்தியில் மிகுந்த விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் ஏ9 வீதியில் சாவகச்சேரி நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பழைமை வாய்ந்த பஸ் தரிப்பிடங்கள் நகர சபையால் இடித்து அழிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

நிதர்சன் வினோத்

# நோயாளர்களின் உயிரை காக்க AIA ஓட்டம்




அபெக்ஷா புற்றுநோய் வைத்தியசாலைக்கு நிதி திரட்டுவதற்காக ரன் போஃ தெயார் லைவ்ஸ் 2023 (Run For Their Lives 2023) திட்டத்தில் AIA இன்ஷூரன்ஸ் பங்கேற்றிருந்ததாக அறிவித்துள்ளது. இந்த அறக்கட்டளை ஓட்டமானது இலங்கையில் தொற்றா நோய்களைத் தடுப்பதிலும் மற்றும் நிர்வகிப்பதிலும் கவனம் செலுத்தி மக்கள் ஆரோக்கியமாக, நீண்ட ஆயுளுடன், சிறந்த வாழ்க்கையினை வாழ்வதற்கு உதவும் AIA இன் வர்தக நாம நோக்குடன் இணைந்துள்ளது. மேலும் இந்நிறுவனம் தொற்றா நோய்களை எதிர்த்துப் போராடுவதற்கான அதன் அர்ப்பணிப்பினைத் தொடர்வதோடு நாட்டிலுள்ள முன்னணி தொற்றா நோய்கள் குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

2030 ஆம் ஆண்டளவில் ஒரு பில்லியன் மக்களின் உயிர்களில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற AIA இன் இலக்குடன் RFTL இன் பங்கேற்பாளர்கள் நோய்களைத் தடுக்கவும், நீண்ட காலத்திற்கு ஆரோக்கியமாக இருக்கவும் உதவும் ஆரோக்கிய மற்றும் நல்வாழ்வுப் பழக்கத்திற்கான உறுதிமொழியினை மேற்கொள்வதற்காக ஊக்குவிக்கப்பட்டிருந்தனர். பங்கேற்பாளர்கள் தங்கள் ஆரோக்கியமற்ற பழக்கங்களை அளவிடும் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை முறைப் பழக்கங்களைப் பரிந்துரைக்கும் நிகழ்நேரக் கணக்கெடுப்பிலும் பங்கேற்றிருந்தனர். AIA இன் ஆரோக்கிய நல்வாழ்வுப் பங்காளரான வீடா மெடிக்கல் கிளினிக் (Vida Medical Clinic) நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆரோக்கிய நல்வாழ்வு விளையாட்டுக்கள் மற்றும் இலவச BMI அமர்வுகளில் பங்கேற்றதற்காக பங்கேற்பாளர்களுக்கு உடனடியான வெகுமதிகளும் வழங்கப்பட்டிருந்தன.

# AIMG ஸ்ரீ லங்காவுடன் SLT- MOBITEL கைகோர்ப்பு




SLT-MOBITEL, அண்மையில், இலங்கை சந்தைப்படுத்தல் பட்டதாரிகளுக்கான சர்வதேச சம்மேளனத்துடன் (AIMG) கூட்டாண்மை பங்காண்மை உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதனூடாக, தனது சந்தை சென்றடைவு மற்றும் சிறந்த நிபுணத்துவச் சிறப்பு ஆகியவற்றை எய்துவதற்கு எதிர்பார்த்துள்ளது.

AIMG மற்றும் SLT-MOBITEL இடையிலான பங்காண்மையினூடாக, இரு நிறுவனங்களுக்கும் பரஸ்பர அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என கருதப்படுவதுடன், தொழிற்துறையின் முன்னிலைக்கு இரு வேறுபட்ட ஜாம்பவான்களை முன்கொண்டு வந்து, தமது உறுதியான ஸ்தானத்தை மேலும் வலிமைப்படுத்த முன்வந்துள்ளன.


இந்தப் பங்காண்மை தொடர்பில் SLT-MOBITEL இன் குழும பிரதம சந்தைப்படுத்தல் அதிகாரி பிரபாத் தஹநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், “தேசிய முன்னோடி எனும் வகையில், சிறந்த பங்காண்மைகளினூடாக எமது நோக்கத்தை சிறந்த முறையில் நிறைவேற்றிக் கொள்ளலாம் என நாம் கருதுகின்றோம். அந்த வகையில் இந்தப் பங்காண்மையினூடாக, எமது வாடிக்கையாளர்களுக்கு நாம் பெற்றுக் கொடுக்கும் சேவைகள் மேலும் வலிமைப்படுத்தப்படும் எனக் கருதுகின்றோம். எனவே, AIMG போன்ற நிபுணத்துவ சந்தைப்படுத்தல் சம்மேளனத்துடன் கைகோர்ப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைவதுடன், இந்தப் பங்காண்மையினூடாக எமது பெறுமதி வாய்ந்த வாடிக்கையாளர் வலையமைப்பை மேலும் வலிமைப்படுத்திக் கொள்வதற்கு சிறந்த வாய்ப்புக் கிடைக்கும் எனவும் கருதுகின்றோம்.” என்றார்.

SLT-MOBITEL என்பது தேசிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப (ICT) தீர்வுகள் வழங்குநராகத் திகழ்வதுடன், 165 வருட காலத்துக்கும் மேலாக முன்னணி நிலையான இணைப்பு, மொபைல் புரோட்பான்ட் மற்றும் ஆதார உட்கட்டமைப்பு சேவைகள் வழங்குநராகவும் திகழ்கின்றது. SLT-MOBITEL இனால் நுகர்வோரின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றும் வகையிலான குரல், டேட்டா, புரோட்பான்ட், மொத்த, என்டர்பிரைஸ், க்ளவுட், சர்வதேசம் மற்றும் IPTV அடங்கலான சேவைகள் மற்றும் தீர்வுகள் வழங்கப்படுகின்றன. SLT-MOBITEL வாடிக்கையாளர்களுக்கு பரந்தளவு இணைப்புத் தீர்வுகளான Fibre, ADSL மற்றும் 4G LTE போன்ற இணைப்புத் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், நுகர்வோர் சேவைகளான PeoTV மற்றும் eChanneling போன்றவற்றையும் பெற்றுக் கொள்ளலாம். நிறுவனத்தினால் மனித வளங்கள் தீர்வுகள், தொலைபேசி விபரக்கொத்து சேவைகள், டிஜிட்டல் சந்தைப்படுத்தல் தீர்வுகள் மற்றும் தொழிற்கல்வி சேவைகள் போன்றனவும் வழங்கப்படுகின்றன.

புதிய கைகோர்ப்பு தொடர்பாக AIMG ஸ்ரீ லங்காவின் தவிசாளர் சுஜித் சில்வா கருத்துத் தெரிவிக்கையில், “எமது கூட்டாண்மைப் பங்காளராக SLT-MOBITEL ஐ கொண்டிருப்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கின்றோம். வியாபார மற்றும் சந்தைப்படுத்தல் சமூகத்தினுள் நிபுணத்துவ சிறப்பை மேலும் மேம்படுத்தும் வகையில் கிடைத்திருந்த ஆதரவு தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம். SLT-MOBITEL இன் தொடர்ச்சியான ஆதரவுடன், இலங்கையில் AIMG மற்றும் அதன் செயற்பாடுகளை தொடர்ந்தும் மேம்படுத்தும் வகையில் இயங்கக்கூடியதாக இருக்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்.” என்றார்.

சந்தைப்படுத்தல் துறையைச் சேர்ந்த முன்னோடிகளால், மூன்று தசாப்த காலத்துக்கும் அதிகமான அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தைக் கொண்டு, 2020 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் இலங்கை சந்தைப்படுத்தல் பட்டதாரிகளுக்கான சர்வதேச சம்மேளனம் (AIMG) நிறுவப்பட்டிருந்தது.

AIMG இன் பிரதான இலக்கு என்பது, சர்வதேச சந்தைப்படுத்தல் தகைமைகளுடன் சிறந்த மற்றும் நிபுணத்துவமான பிணைப்பை ஏற்படுத்தி, இளம் மற்றும் சிரேஷ்ட அங்கத்தவர்களுக்கு அறிவுப் பகிர்வுக்காக பயிற்சிப்பட்டறைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பல்வேறு இதர செயற்பாடுகளுக்கான கட்டமைப்பை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.




## SLIoT Challenge மற்றும் IESL Robogames

# போட்டிகள் SLT-MOBITEL இனால் ஏற்பாடு

புத்தாக்கமான மனநிலையைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்பு வழங்கும் வகையில், SLT-MOBITEL இன் வலுவூட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ‘SLIoT Challenge 2022’ மற்றும் ‘IESL Robogames 2022’ ஆகியன அண்மையில் இடம்பெற்றன.

SLIoT Challenge 2022 இல் பட்டம்பயிலுனர்கள் பிரிவில் 1ஆம் இடத்தை Metatron, 2ஆம் இடத்தை JuRu மற்றும் 3ஆம் இடத்தை ஆகியன Strydo Labs பெற்றுக் கொண்டன. திறந்த பிரிவில், வெற்றியாளராக Achievers தெரிவாகியிருந்ததுடன், 2ஆம் இடத்தை UpThrust மற்றும் 3ஆம் இடத்தை Indika ஆகிய அணிகள் பெற்றுக் கொண்டன.

IESL Robogames 2022 போட்டியின் பாடசாலைகள் பிரிவில் 1ஆம் இடத்தை Ralphy Boy, 2ஆம் இடத்தை Kada Ozaki மற்றும் 3ஆம் இடத்தை Mavericks ஆகியன பெற்றுக் கொண்டதுடன், பட்டம்பயிலுனர்கள் பிரிவில் வெற்றியாளராக Trix, 2ஆம் இடத்தை Botivity மற்றும் 3ஆம் இடத்தை Terminator ஆகிய அணிகள் பெற்றுக் கொண்டன.

இந்நிகழ்வில் Institute of Engineers Sri Lanka (IESL) மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் அங்கத்தவர்கள் பிரசன்னமாகியிருந்ததுடன், இலங்கையின் திறமையான புத்தாக்க சிந்தனையாளர்களுக்கு மற்றும் எதிர்கால பொறியியலாளர்களுக்கு வாழ்த்துக்ளையும் தெரிவித்தனர். இதில், IESL பிரதம நிறைவேற்று அதிகாரி பொறியியலாளர் நீல் அபேசேகர, IESL தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணனி பிரிவு கழக தவிசாளர் பொறியியலாளர் ஷஹீட் முஸ்தாலி, IESL தெரிவு செய்யப்பட்ட தலைவர் பேராசிரியர். ரஞ்சித் திசாநாயக்க, மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்களான பேராசிரியர். சந்தன கமகே, கலாநிதி. குட்டில குணசேகர உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

## கஷ்டப்பட்டு உழைத்த

# பணத்தை இழந்துவிட வேண்டாம்



ச.சேகர்








இலங்கை பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ள நிலையில், பொது மக்களுக்கு எவ்வாறான முதலீடுகளில் தம்வசமிருக்கும் பணத்தை முதலீடு செய்யலாம் என்பது தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் எழுந்துள்ளதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

குறிப்பாக, கடந்த ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு பெருமளவு வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து, பொது மக்கள் சேமிப்பில் வைத்திருந்த பணத்தின் பெறுமதியும் வீழ்ச்சி கண்டது. இதனைத் தொடர்ந்து பணவீக்கமும் அதிகரித்திருந்த நிலையில், வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளது.

இவ்வாறான சூழ்நிலைகளைப் பயன்படுத்தி, விபரமறியாத மக்களை ஏமாற்றி, அவர்கள் தம்வசம் வைத்திருக்கும் சேமிப்புகளை சூட்சுமமாக அள்ளிச் செல்லும் திட்டங்கள் எமது சூழலில் பெருகிக் காணப்படுகின்றன.

இவை தொடர்பில் கண்காணிப்பதற்கு எந்த அதிகாரத் தரப்பும் இல்லாத நிலையிலும், நாட்டில் காணப்படும் சட்ட விதிமுறைகளின் பின்தங்கிய நிலைகளை தமக்கு சாதகமாக்கிக் கொண்டும், தனியார் நிறுவனமாக தம்மைப் பதிவு செய்து கொண்டு, குறுகிய காலத்தில் அதிகளவு வட்டி வீதங்களைப் பெற்றுத் தருவதாக மக்களை நம்பும் வகையில் செயலாற்றி பணத்தைப் பெற்றுக் கொள்ளும் கும்பல்கள் பற்றி அண்மைய நாட்களில் பரவலாக பேசப்பட்டது.

இவ்வாறு இயங்கும் மூன்று நிறுவனங்களை சில வாரங்களுக்கு முன்பாக இலங்கை மத்திய வங்கி இனங்கண்டு அவற்றின் சொத்துக்களை முடக்குவது மற்றும் அந்த நிறுவனங்களின் பணிப்பாளர்கள் நாட்டைவிட்டு வெளியேறுவதை தடுக்கும் உத்தரவுகளையும் பெற்றிருந்தது. இதுபற்றி ஊடகங்களுக்கும் அறிவித்திருந்தது.

இந்த மோசடி நிறுவனங்களின் செயற்பாடுகள் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் இலங்கையில் பரவலாக சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்டிருந்ததுடன், இவை தொடர்பில் அவதானமாக இருக்குமாறு சில தளங்களில் விழிப்புணர்வு பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், சமூக வலைத்தளங்களில் தம்மை முன்மாதிரியாகக் கொள்பவர்களாக அடையாளப்படுத்திக் கொள்ளும் நபர்கள் செல்வாக்குச் செலுத்துபவர்கள் (இன்புளுவென்ஸர்கள்) தமது வீடியோ பதிவுகளில் இவ்வாறான மோசடி முதலீட்டுத் திட்டங்கள் பற்றிய பிரச்சாரங்களையும் முன்னெடுத்திருந்தனர்.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டியது முக்கியமானதாகும். ஏனெனில், ஆரம்பத்தில் இவர்களின் அணுகல் மற்றும் தாம் இலக்கு வைக்கும் நபர்களின் நம்பிக்கையை வெல்லும் வகையிலான செயற்பாடுகள் அனைத்தும் அவர்களின் மீது அதீத நம்பிக்கையை தோற்றுவிக்கும் வகையில் அமைந்திருக்கும்.

தொடர்ச்சியாக தொடர்புகளை பேணி, நம்பிக்கையை வென்றதன் பின்னர், பணத்தை வைப்புச் செய்யுமாறு வங்கிக் கணக்கை வழங்குவதுடன், அவர்களின் போலி வாக்குறுதிகளுக்கு ஏமாந்து, மக்களும் தமது பணத்தை வைப்பிலிடுகின்றனர். குறுகிய காலத்தில் அளவுக்கதிகமாக பணத்தை சம்பாதித்துவிட வேண்டும் எனும் பேராசையினால் தாம் வாழ்நாள் முழுவதிலும் கஷ்டப்பட்டு உழைத்த பணத்தை, இவ்வாறான மோசடியான நிறுவனங்களில் வைப்பிலிட்டு இழந்துவிடும் நிலை எழுகின்றது.

இதனைத் தொடர்ந்து, வழமையாக பொலிசில் முறைப்பாடு செய்தல், கஷ்டப்பட்டு சேமித்த பணம் பறிபோய்விட்டதே என அழுது புலம்புவதும் அர்த்தமில்லாத செயல்களாகிவிடும்.

இலங்கை மத்திய வங்கியினால் இவ்வாறான மோசடி செயற்பாடுகள் தொடர்பில் கண்காணிக்கப்படுவதாக சிலர் தவறான அபிப்பிராயத்தைக் கொண்டுள்ளனர். உண்மையில், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரமளிக்கப்பட்ட நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் விவரங்கள், பொது மக்களின் பார்வைக்காக அதன் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பட்டியலிடப்பட்டுள்ளது.

இந்த நிறுவனங்களின் பட்டியல் காலாகாலத்தில் இலங்கை மத்திய வங்கியினால் மெருகேற்றம் செய்யப்படுவதுடன், அவற்றில் மக்கள் பணத்தை வைப்புச் செய்வதால் எழக்கூடிய ஏதேனும் சிக்கல்களுக்கு இலங்கை மத்திய வங்கி தலையிட்டு, தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும். அது தொடர்பில் ஏற்கனவே தன்வசம் சட்ட விதிமுறைகளையும் கொண்டுள்ளது.

தமது சேமிப்பு முழுதையும் ஒரே ஆதனத்தில் முதலீடு செய்வதை தவிர்த்து, அவற்றை வெவ்வேறு மூலங்களில் முதலீடு செய்வதனூடாக தமது முதலீட்டின் மீது காணப்படும் இடர்நிலையை குறைத்துக் கொள்ள முடியும்.

சில முதலீடுகள் அதிகளவு வருமதிகளை வழங்குவதாக அமைந்திருக்கும். அவ்வாறான முதலீடுகளில் அதிகளவு இடர்கள் இருக்கும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். குறைந்த வருமதிகளை வழங்கும் முதலீடுகள், பாதுகாப்பானவையாக அமைந்திருக்கும்.

இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரமளிக்கப்பட்ட நிதிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களினால் வழங்கப்படும் நிலையான வைப்புகள் இவ்வாறு முதலீட்டை மேற்கொள்வதற்கு பாதுகாப்பான தெரிவாகும். இலங்கை ரூபாயில் தமது சேமிப்புகளை பேண விரும்பாதவர்கள், பணத்துக்கு மாற்றீடான தங்கத்தை வாங்கி தமது பணத்தை சேமித்து வைக்க முடியும்.

அது போன்று கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களின் பங்குகளில் முதலீடு செய்யலாம். இதன் போது பங்கு முகவரின் ஆலோசனைகளைப் பெறுவதுடன், சந்தையின் போக்கு தொடர்பில் தொடர்ச்சியாக பின்தொடர்ந்து அறிந்திருப்பது முக்கியமானதாகும். அவ்வாறு மேற்கொள்வதனூடாக தமது முதலீட்டின் உச்ச பயனை பெற்றுக் கொள்ள முடியும்.

காப்புறுதித் திட்டங்களுடன் இணைந்த முதலீடுகளும் நீண்ட கால அடிப்படையில் பயனளிப்பனவாக அமைந்துள்ளன. காணி, வீடு சொத்து வாங்குதலும் தற்காலத்தில் சிறந்த வருமானத்தை வழங்கக்கூடிய முதலீட்டுத் திட்டங்களாக அமைந்துள்ளன.

நாடு காணப்படும் தற்போதைய பொருளாதார நெருக்கடியான சூழலில், கஷ்டப்பட்டு உழைத்து, சேமித்து வைத்துள்ள பணத்தை, வெறும் வார்த்தைகளை நம்பி, விளம்பரங்களை நம்பி தொலைத்துவிட வேண்டாம் என்பது கனிவான வேண்டுகோளாக உள்ளது. அனைத்து முதலீடுகளிலும் ஆபத்துகள் காணப்படுகின்றன. எந்த முதலீட்டில் குறைந்த ஆபத்து உள்ளதோ, அதைத் தெரிவு செய்வது சிறந்தது.

# சிறுசெய்திகள்

## இன்று மேன்முறையீடு

அவதூறு வழக்கில் இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதை எதிர்த்து ராகுல்காந்தி இன்று (03) மேன்முறையீடு செய்கின்றார்.

## பின்னணி 'சதி'

அவதூறு வழக்கில் 2 ஆண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, எம்.பி. பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்பட்டு உள்ளார். இதன் பின்னணியில் சதி இருப்பதாக காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரும், ராஜஸ்தான் முதல் மந்திரியுமான அசோக் கெலாட் குற்றம் சாட்டியுள்ளார்.

## 96 காயங்கள்

செங்கல்பட்டு சிறார் இல்லத்தில் இறந்த சிறுவன் உடலில் 96 காயங்கள் உள்ளன என உடற்கூராய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3) பாலியல் தொல்லை

சென்னை திருவான்மியூரில் கலாஷேத்ரா நாட்டியக் கல்லூரி செயல்பட்டு வரும் கலாஷேத்ரா கல்லூரி மாணவிகளுக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக, பேராசிரியர் மீது 3 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## தாக்குதல்

கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த மண்டபம் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல் நடத்தியுள்ளனர். ரோந்து படகை வைத்து இலங்கை கடற்படை மோதியதில் மீனவர்களின் விசைப்படகு சேதம் அடைந்துள்ளது.

## 6,831,892 பேர் பலி

உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 68 இ லட்சத்தை தாண்டியது. பல்வேறு நாடுகளை சேர்ந்த 6,831,892 பேர் கொரோனா வைரஸால் உயிரிழந்தனர். உலகம் முழுவதும் கொரோனாவால் 683,991,820 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 656,926,949 பேர் குணமடைந்துள்ளனர். மேலும் 39,914 பேர் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## ஸ்பிரிங் பூஸ்டர்

இங்கிலாந்தில்75 வயதுக்கு மேற்பட்டோருக்கு நாளை முதல் வசந்த கால பூஸ்டர் தடுப்பூசி செலுத்தப்படும் என்று சுகாதார சேவை தெரிவித்துள்ளது. "75வயதுக்கு மேற்பட்டவர்கள் உட்பட நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கு இன்று (03) முதல் ஸ்பிரிங் பூஸ்டர் தடுப்பூசி போடப்படும்.

# மும்பை: ராகுல் மன்னிப்பு கேட்காவிடின் வழக்கு



மோடி சமூகம் பற்றி பேசியதற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அவதூறு வழக்கில் ராகுல் காந்திக்கு சூரத் நீதிமன்றம் 2 ஆண்டு சிறை தண்டனை வழங்கியது. இதையடுத்து அவரது எம்.பி. பதவி தகுதியிழப்பு செய்யப்பட்டது.

இந்நிலையில், ராகுல் காந்தி மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) வலியுறுத்துகிறது. ஆனால் ராகுலோ, 'மன்னிப்புக் கேட்க நான் ஒன்றும் சாவர்க்கர் அல்ல' என்றார்.

இதுகுறித்து சாவர்க்கரின் பேரன் ரஞ்சித் சாவர்க்கர் கூறுகையில், உத்தவ் சாவர்க்கர் மீது மிகுந்த மரியாதை உள்ளது. எனவே, சாவர்க்கர் குறித்து பேசியதற்கு ராகுல் மன்னிப்புக் கேட்க வேண்டும். இல்லாவிட்டால், அவர் மீது வழக்கு பதிவு செய்வேன் என்றார்.

## மும்பை: 'வீலிங்' சாகசத்தில் 2 பெண்களும் குஷி



மும்பை பாந்திரா குர்லாவில் இரண்டு இளம் பெண்களை மோட்டார் சைக்கிளில் முன்னுக்கும் பின்னுக்கும் அமர வைத்த இளைஞன் மின்னல் வேகத்தில் பறந்து சாகசம் செய்தார்.

மோட்டார் சைக்கிளின் முன்சக்கரத்தை மேலே தூக்கியவாறு 'வீலிங்' சாகசம் செய்து பரபரப்பை ஏற்படுத்தினார். வாலிபரின் விபரீத சாகசத்துக்கு 2 இளம்பெண்களும் ஈடுகொடுத்தனர். உயிரை காப்பாற்றிக்கொள்ள அவர்கள் இளைஞனை உடும்பு போல கட்டிப்பிடித்து தொற்றி கொண்டனர்.

இந்த வீடியோவுக்கு சமூக வலைத்தளத்தில் 1 லட்சத்து 40 ஆயிரம் பேர் வரை 'லைக்' தெரிவித்து உள்ளனர். விபரீத சாகசம் செய்த இளைஞன், அவருடன் திகில் பயணம் செய்த இளம்பெண்கள் மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர்.

## குவாலியர்: காதல் தோல்வியால் 'கிறுகிறுக்க' வைத்த பெண்

காதல் தோல்வியால் ஆண்கள்தான் தாடியை வைத்துக்கொண்டு இல்லையே அவளை மறப்பதற்காக ஏதேதோ செய்வதைபற்றி கேள்வி பட்டிருக்கின்றோம். ஆனால், காதல் தோல்வியால் பெண்ணொருவர் மதுபானத்தை குடித்துவிட்டு நடுரோட்டில் ரகளை செய்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மத்திய பிரதேசம் மாநிலம் குவாலியர் நகரில் ஒரு இளம்பெண் நடுரோட்டில் ரகலை செய்தார்.

வீதியில் செல்லும் மக்களை எல்லாம் அவர் பாடாய் படுத்துகிறார். கார் மீது ஏறுகிறார், ஒருவரின் ஸ்கூட்டரை பிடுங்கிக்கொள்கிறார், சாலை தடுப்புகளை கீழே தள்ளி விடுகிறார். பல பெண்கள் அவரை அங்கிருந்து அழைத்துச்செல்ல முயற்சிக்கிறார்கள். ஆனால் அவர் யாருக்கும் அடங்குவதாகத் தெரியவில்லை.



# வொஷிங்டன்: பந்தாடியது பயங்கர புயல்




அமெரிக்காவின் பல மாகாணங்களில் கடந்த சில மாதங்களாக பனிப்புயல், நிலச்சரிவு போன்ற இயற்கை பேரிடர்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் ஏற்படும் பாதிப்புகளின் தீவிர தன்மையை குறைக்க அரசாங்கம் சார்பில் பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக வருகிற 10-ந் திகதி வரை வானிலை ஆய்வு மையம் சார்பில் அங்கு புயல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய மேற்கு பகுதிகளில் சனிக்கிழமை பலத்த புயல் காற்று வீசியது. இதனால் பல மாகாணங்கள் பலத்த பாதிப்புக்கு உள்ளாகின.

ஏராளமான வீடுகள் மற்றும் அலுவலகங்கள் சேதம் அடைந்தன. பல நகரங்கள் இருளில் மூழ்கின. 2 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் மின்சாரம் இன்றி தவிப்புக்குள்ளாகி உள்ளனர். இந்த புயல் காற்றுக்கு நாடு முழுவதும் இதுவரை 21 பேர் பலியாகி உள்ளனர்.

## வொஷிங்டன்: சூரியனில் 'கருந்துளை'



சூரியனில் மேற்பரப்பில் ராட்சத 'கருந்துளை' ஒன்று விழுந்துள்ளது . இந்தத் கருந்துளையை கரோனல் துளைகள் என்று விஞ்ஞானிகள் அழைக்கின்றனர். இந்த துளை பூமியை விட 20 மடங்கு அளவு பெரியது என்றுகூறப்படுகிறது.

இது குறித்து நாசா விஞ்ஞானிகள் கூறும்போது, "இந்த துளை காரணமாக வெள்ளிக்கிழமைக்குள் பூமியை நோக்கி 1.8 மில்லியன் மைல் வேகத்தில் சூரியக் காற்றைக் கட்டவிழ்த்துவிடும். இதனை தெற்காசிய நாடுகள், அஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் உணரலாம். இந்த வெடிப்புகளிலிருந்து வெளியேறும் வெப்ப கதிர்கள் ரேடியோ தகவல் தொடர்புகள், விண்கலம், விண்வெளி வீரர்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தலாம். மேலும், இந்தத் துளையின் மூலம் பூமியின் மேற்பரப்பில் இன்னும் கூடுதல் இடங்களில் துருவ ஒளிகள் தோன்றலாம்" என்றனர்.

## டோக்கியோ: புகுஷிமா பகுதியில் வசிக்க அனுமதி



புகுஷிமா அணுமின் நிலைய விபத்து நடந்த இடத்தில் 12 ஆண்டுகளுக்கு பின் ஒரு சில பகுதிகளில் மக்கள் வசிப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஜப்பானில் கடந்த 2011ம் ஆண்டு பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது. அதனைத் தொடர்ந்து அங்கு சுனாமி தாக்கியது. இதில் ஆயிரக்கணக்கானோர் பலியாகினர்.மேலும் புகுஷிமாவின் டாய்ச்சி அணு உலையில் உள்ள ஜெனரேட்டர்கள் சேதம் அடைந்தன. இதனால் சுற்றியுள்ள பகுதிகளில் அணு கதிர்வீச்சு தாக்கியது. மக்கள் வசிக்க முடியாத அளவிற்கு அணு உலையில் இருந்து கதிர் வீச்சின் தாக்கம் அதிகமாக இருந்தது. 20 கிலோ மீட்டர் சுற்றளவில் வசித்து வந்த மக்கள் வெளியேற்றப்பட்டனர். விபத்து நடந்து 12 ஆண்டுகளுக்கு பின்,டோமியோகா நகரின் ஒரு சில பகுதிகளில் கட்டுப்பாடுகள் விலக்கப்பட்டு மக்கள் மீண்டும் குடியேற அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.



### முதலாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில்

# நியூசிலாந்தை வென்ற இலங்கை

முதலாவது இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டியில் நியூசிலாந்தை இலங்கை வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், ஒக்லன்டில் நேற்று நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற நியூசிலாந்தின் பதிலணித்தலைவர் டொம் லேதம், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், சரித் அஸலங்க 67 (41), குசல் பெரேரா ஆட்டமிழக்காமல் 53 (45), குசல் மென்டிஸ் 25 (09), வனிடு ஹஸரங்க ஆட்டமிழக்காமல் 21 (11) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ஜேம்ஸ் நீஷம் 4-0-30-2 என்ற பெறுதியைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 197 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, 20 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், டரைல் மிற்செல் 66 (44), மார்க் சப்மன் 33 (23), டொம் லேதம் 27 (16), றஷின் றவீந்திரா 26 (13), ஜேம்ஸ் நீஷம் 19 (10), இஷ் சோதி ஆட்டமிழக்காமல் 10 (04) ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், வனிடு ஹஸரங்க 4-0-30-2, மகேஷ் தீக்ஷன 4-0-22-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில், மகேஷ் தீக்ஷன வீசிய சுப்பர் ஓவரில் 2 விக்கெட்டுகளையும் இழந்து எட்டு ஓட்டங்களையே நியூசிலாந்து பெற்ற நிலையில், ஒன்பது ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை அடம் மில்ன் வீசிய சுப்பர் ஓவரில் சரித் அஸலங்க ஆட்டமிழக்காமல் பெற்ற 10 (02) ஓட்டங்களுடன் வென்றது. இப்போட்டியின் நாயகனாக சரித் அஸலங்க தெரிவானார்.

### ஐ.பி.எல்:

## டெல்லியை வீழ்த்திய லக்னோ

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு 20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரில், லக்னோவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற டெல்லி கப்பிட்டல்ஸுடனான போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: டெல்லி

லக்னோ: 193/6 (20 ஓவ. )

(துடுப்பாட்டம்: கைல் மேயர்ஸ் 73 (38), நிக்கலஸ் பூரான் 36 (21), கிருஷ்ணப்பா கௌதம் ஆ.இ 06 (01) ஓட்டங்கள். பந்துவீச்சு: கலீல் அஹ்மட் 2/30 [4])

டெல்லி: 143/9 (20 ஓவ, )

(துடுப்பாட்டம்: டேவிட் வோர்னர் 56 (48), றீலி றொஸோ 30 (20) ஓட்டங்கள். பந்துவீச்சு: மார்க் வூட் 5 ஆவேஷ் கான் 2/29 [4], ரவி பிஷ்னோய் 2/31 [4], கிருஷ்ணப்பா கௌதம் 0/23 [4])

போட்டியின் நாயகன்: மார்க் வூட்

முன்னதாக மொஹாலியில் நடைபெற்ற போட்டியில் கொல்கத்தா நைட் றைடர்ஸை பஞ்சாப் கிங்ஸ் டக்வேர்த் லூயிஸ் முறையில் வென்றிருந்தது.

இந்நிலையில், சென்னையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெற்ற போட்டியில் சுப்பர் ஜையன்ட்ஸை சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.



### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## அஸ்டன் வில்லாவிடம் தோற்ற செல்சி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அஸ்டன் வில்லாவுடனான போட்டியில் 0-2 என்ற கோல் கணக்கில் செல்சி தோற்றது.

இதேவேளை, தமது மைதானத்தில் நடைபெற்ற லிவர்பூலுடனான போட்டியில் 4-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றி வென்றது.

இந்நிலையில், கிறிஸ்டல் பலஸின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-2 என்ற கோல் கணக்கில் லெய்செஸ்டர் சிற்றி தோற்றது.

## ஹாட்லியைத் தோற்கடித்த நெல்லியடி மத்தி

எஸ். தில்லைநாதன்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரிகளின் முன்னாள் கணிதப் பேராசான் இரத்தினசபாபதி நினைவான கால்பந்தாட்டப் போட்டி ஹாட்லிக் கல்லூரி மற்றும் நெல்லியடி மத்திய கல்லூரி மாணவ அணிகளுக்கிடையில் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

14 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்காக இடம்பெற்ற போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி ஹாட்லிக் கல்லூரி 6-1 என்ற ரீதியில் வென்றது

தொடர்ந்து 20 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான போட்டி சமநிலையில் முடிந்தது. தொடர்ந்து பெனால்டி வெற்றி தீர்மானிக்கப்பட்டது. இதில் நெல்லியடி மத்திய கல்லூரி 3-1 என்ற ரீதியில் வென்றது.

ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய கல்லூரி பழையமாணவர்கள், மற்றும் ஆசிரியர்களுக்கிடையில் இடம் பெற்ற போட்டிகளில் ஆசிரியர்களுக்கான போட்டியில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியும், பழைய மாணவர்களுக்கான போட்டியில் ஹாட்லிக் கல்லூரியும் வெற்றியீட்டியது. கணித பேராசான் இரத்தினசபாபதி நினைவு கேடையத்தை நெல்லியடி மத்திய கல்லூரி தமதாக்கி கொண்டது.

இரத்தினசபாபதி அவர்கள் ஆசிரியராக கடமையாற்றிய காலத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி மற்றும் ஹாட்லிக் கல்லூரிகளில் அதிகமான மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு பொறியியல் பிரிவில் தெரிவாகியிருந்த சூழலில்தான் அரசால் தரப்படுத்தல் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடதக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 03 ஏப்ரல் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.